சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு—௩௪.

Office of the
Director of Archaeology
Madras
2272

திருச்சிற்றம்பலம்

குலசேகரன்பட்டினம்
தெய்வசிகாமணிக் கவிராயரவர்கள்
அருளிய

# குலசை நகர்
# அறம்வளர்த்தநாயகி பிள்ளைத்தமிழ்

திருவாவடுதுறையாதீனம்
மாதவச் சிவஞான சுவாமிகள்
மாணாக்கர்
தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்
அருளிய

# குலசை உலா

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LIMITED.
TINNEVELLY JULY 1925 & MADRAS

PRICE AS. 8

R. S. Sambasiva Sastri

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு - ௫௬

உ

திருச்சிற்றம்பலம்

894.811

குலசேகரன்பட்டினம்

**தெய்வசிகாமணிக் கவிராயரவர்கள்**

அருளிய

குலசைநகர்

# அறம்வளர்த்தநாயகி பிள்ளைத்தமிழ்

Office of the
Director of Archaeology
Madras

2272

திருவாவடுதுறையாதீனம்

மாதவச் சிவஞான சுவாமிகள்

மாணாக்கர்

**தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர்**

அருளிய

# குலசை உலா

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்

திருநெல்வேலி & சென்னை

அட்சய௵ சித்திரைமீ

**Published by**

*The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited.*

:: *Tinnevelly and Madras* ::

*April, 1926*

Printed by Sivakami Vilasam Press, Madras.

2272

# முகவுரை

## நேரிசை வெண்பா.

உலகோம் பறம்வளர்த்த உள்பொருளைப் போற்ற
நலம்வாழ்வு தானேயாம் நாடில்—நிலமேல்
பலர்புகழும் பட்டினங்காண் பண்புள்ளோர் வாழும்
குலசேகரன்பட் டினம். க

தில்லையொடு காஞ்சியினைச் சென்று தொழும்பயன்கள்
எல்லாமும் இங்கெய்தி இன்புறுவர்—சொல்லும்
அறம்வளர்த்தாள் நல்வடக்கும் அம்மைசிவ காமி
உறுதெற்குந் தோன்றலால் உற்று. உ

உற்றிவ்வூர் வாழும் உயர்வேளா ளர்குலத்தில்
நற்றவத்தால் தோன்றி நயந்தருளால்—கற்றோர்கள்
உய்யத் தமிழ்ப்பாடி ஓங்கினன் உண்மைசேர்
தெய்வ சிகாமணியாந் தேர். ௩

மிகவுஞ் சிறப்புப் பொருந்திய கோயில் என்று சொல்லப்படுந் திருத்தில்லையையும், உலகீன்ற அம்மை முப்பானிரண் டறம்வளர்த் தருளிய திருக்காஞ்சியினையும், தனித்தனி சென்று வழிபாடு செய்பவர்கள் பெறும் பயன் எல்லாமும் இக்குலசேகரன் பட்டினத்தில் ஒருமிக்கப் பெறுவார்கள். எதனாலென்றால், ஊருக்கு வடக்கே திருக்காஞ்சியினின்றும் ஒரு மாமரத்துடன் எழுந்தருளி உறையும் அறம் வளர்த்தவள் திருக்கோவிலும், தெற்கே தில்லைத் திருக்கூத்துக் காட்டியருளிய சிறப்புப் பொருந்திய சிதம்பர ஈசுரர் பக்கத்துறையும் சிவகாமியம்மை திருக்கோவிலும் அமைந்திருத்த

லால். உலகீன்ற அம்மை, திருக்காஞ்சியில் ஒரு மாமரத்து நீழ லில், பெரும் பொருளைச் சிவக்குறி நிறுவி வழிபட்டனள். இறைவ னும் அம்மையார் வழிபாட்டுக் கிரங்கி, முறையே “முலைச்சுவடும் வளைச்சுவடும்” பதியும்படி தழுவக் குழைந்து அருள் செய்தான். பின்பு, அம்மை இக்காஞ்சித் திருநகரில், இறைவன்பால் இருநாழி நெற்பெற்று, வேளாளராற் பெருக்கி, முப்பானிரண் டறம் வளர்த் தனள். இதனால் அம்மைக்கு அறம் வளர்த்தவள் என்னுந் திருப் பெயர் உண்டாயிற்று.

குலசேகரன் பட்டினத்தில், கடவுட் பற்றுடைய ஒரு பெரிய வர் இருந்தார். அவர் திருக்காஞ்சியைக் கண்டு வழிபாடு செய்யப் பெருங்காதல் கொண்டனர். காஞ்சியைக்கண்டு முற்பிறப்பிற் றுஞ் செய் தவம் கைகூடியது என்று வழிபட்டனர். அம்மையையும் அப்ப னையும் புகழ்ந்து தொழுதனர். எப்பொழுதும் இப்படியே தொழ வேண்டுமென்னும் ஆர்வமுங் கொண்டனர். அம்மையிடத்து, தம் ஊராகிய குலசேகரன்பட்டினத்து இக்காட்சியை நீங்காது தந்தரு ளும்படி வேண்டினர். அம்மையாரும், “காதலாகிக் கசிந்துகண் ணீர் மல்கும்” இப்பெரியவர் வேண்டுகோளுக்கிணங்கி அப்ப னோடும்

“ஒருகுலை யதனிற் பூவொடு பிஞ்சும்
வடுவொடு காயும் பழமும் பற்பல
நெடுஞ்சுவை யோடு நீணிலத் தருளும்”

ஒரு மாமரத்தோடுந் தோன்றி அருள் செய்தனள்.

இஃதுணர்ந்த குலசேகரபாண்டியன் என்னும் மன்னவன், திருக்கோவில் கட்டுவித்து, வேண்டும் (மானிபம்) படிமுறையும் செய்தமைத்தனன். இக்காரணங்களால், அப்பனுக்கு “காஞ்சிவிசய கச்சிகொண்ட பாண்டீசுரர்” எனவும், அம்மைக்கு, “அறம்வளர்த் தவள்” எனவுந் திருப்பெயர் வழங்கிவரலாயின.

சற்றேறக்குறைய, ஐம்பத்தைந்து யாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த நிலநாட்டில் (அட்டபந்தனத்தில்) சிவக்குறியின் அடிப் படை காணல்வேண்டுமென்று நீர்மட்டம்வரை தோண்டினர். தோண்டியும், அடிப்படை காணமுடியவில்லை. அடுக்கடுக்காய்ப் பன்னிரண்டு அருட்குறி (ஆவுடையார்) காணப்பட்டுப் பின்னும் போய்க் கொண்டிருந்தது. இப்படித் தோன்றுவது, அருள் நிகழ்ச்சி யெனக் கருதி அஞ்சி யமைந்தனர். இதனால், நீண்டநாட்களுக்கு முன், மேற்குறித்த பெரியவர் வேண்டுகோளுக்கு இணங்கித் தானு கவே, இறை தோன்றியிருக்க வேண்டுமென, உறுதிசெய்தனர். இச்செயலை நேரிற் கண்ட பெரியவர்கள், இப்பொழுதுங் கூறுகின் றார்கள். மார்க்கண்ட முனிவர், கூற்றுவனினின்றும் பிழைத்தற் பொருட்டு பல திருவூர்களிலுஞ் சென்று சிவக்குறியை வழிபட்டு வந்தனர். இவர்.

> "கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
> ஆற்றல் தலைப்பட் டவர்க்கு."

என்னும் பொய்யா மொழியை மெய்ப்பித்தவர். இவர் இவ்வூரிலும் வழிபாடு செய்தனர் எனப் பெரியவர் கூறுவர்.

இந்நூலாசிரியராகிய "தெய்வசிகாமணிக் கவிராயர்" சற்றே றக்குறைய இருநூற்றைம்பது யாண்டுகளுக்கு முன்னிருந்தவர். வேளாளர் குலத்திற் றோன்றியவர். அம்மையாரிடத்து நிறைந்த பற்றுடையவர். பெரும்புலமை வாய்ந்தவர்: இவ்வூர்க் குறுநில மன்னனாகிய செந்தில் காத்த மூப்பனுருக்குத் தோழரும் புலவரு மானார். ஒருநாள் அம்மன்னவன் அவையில், அயல் நாட்டினின்றும், ஒரு புலவன் பரிசுபெறக் கருதிவந்தான். அவன், தன் கல்விச் செருக்கால் கவிராயர் அவர்களை வெல்ல அழைத்தனன். கவிராயர் அவர்களும் செருக்குற்ற புலவனுக்கு நல்லறிவு புகட்ட நினைத்தனர். தானும் அவனோடு வழக்குப் பேசுவது (தருக்கஞ் செய்வது) தக்கதன்றென வுணர்ந்தனர்.

பின்பு கற்றறியாத சிறுவன் ஒருவனைக் கொண்டு வெல்விக்க வேண்டுமெனக் கருதினர். அரண்மனைத் தையற்காரன் மகனுக்கு அம்மையார் அருளால் திருவெண்ணீறு அணிவித்துச் செருக்கிய புலவனோடு வழக்குரைக்கச் செய்தனர். அம்மையார் அருளால் சிறுவனும் புலவனை வென்று பெருமை யெய்தினன்.

இதனால் கவிராயரும், அச்சிறுவனைத் தம் பிள்ளைபோன்று கருதி ஆவன செய்துவந்தனர். தமக்கு மன்னனிடம், யாண்டு தோறுங் கிடைக்கும் நன்கொடைப் பொருளையும், இச்சிறுவனும் இவன் வழியுள்ளாரும் பெற்றுவரும்படி திட்டஞ் செய்தனர். நாளிதுவரை அப்படியே நிகழ்ந்துவருகின்றது. இப்பொருள் பெறுவார், அம்மையார் திருக்கோவிலிலுள்ள நாள்விழா சிறப்பு விழா முதலிய காலங்களில், அவ்வப்பொழுதுள்ள நிகழ்ச்சியைக் குறித்துப் பாமாலை சாத்தலும், இப் பிள்ளைத்தமிழைப் பாடுதலுந் தங்கடனாகக் கொண்டுள்ளார். பல காலங்களுக்கு முன், காவிரிப் பூம்பட்டினத்தில் பெரிய வியாபாரி ஒருவர் இருந்தார். அவர் ஆண்டுகள்தோறும் திருத்தில்லையாகிய சிதம்பரஞ் சென்று மார் கழித் திருவாதிரைத் திருக்கூத்துக் கண்டு தொழுவது வழக்கம்.

இவர் தன்னுடைய தொழில் காரணமாக எந்தத் துறைமுகத் திருந்தாலும் மார்கழித் திருவாதிரை நாளுக்குத் தில்லை போய்ச் சேரும்படி புறப்பட்டுப் போவதும் வழக்கம். அதுபோல ஒரு முறை புறப்பட்டுப் பாய்க்கப்பல் வழியாக வரும்பொழுது அவர் கருதியபடி கப்பல் போகமுடியாமல் பெரும்புயலில் அகப்பட்டு இவ்வூர்க் கரைவந்து சேர்ந்தார். சேர்ந்து பல ஆண்டுகளாகத் தவறாது கண்டு வழிபட்ட தில்லைக்காட்சி இன்று கிடையாதுபோ யிற்றே எனக் கருதி இறைவனை வேண்டி மிகவும் வருந்தினர். "வேண்டுவார்க்கு வேண்டுவதே ஈயும்" வள்ளலாகிய இறைவனும் அவர் கருத்திற் கிரங்கி இங்கு நின்றும் எறும்பு தொடர்பாக ஊர்ந்து செல்லும் வழியே சென்றால், அங்கோர் சிவக்குறி காணப்

படும், அவ்விடத்து நீ தில்லைக் காட்சியைக் கண்டு களிப்பாயாக வென அருளிச் செய்தார்.

அவரும் அவ்வழியே சென்று சிவக்குறி இருக்குமிடத்துத் தில்லைக் காட்சியைக் கண்டு பேரின்பமுற்றனர். அப்பொழுது அப் பெரியவர், தாம் பெற்ற இன்பம் உலகிலுள்ள மற்றவர்களும் பெறுதல் வேண்டும் என்னும் பேரன்பால், அடியேனுக்கு அருளிய இப் பெருங் காட்சியினை, இவ்விடத்து இந்நாளில் அன்போடு வந்து தொழுபவர்கட்கு எல்லாம் கொடுத்தருளும்படி வேண்டினர். அவருடைய முதிர்ந்த அன்புக் கிரங்கி அதையும் தந்தோமென்று கூறி மறைந்தருளினர்.

பின்பு அப்பெரியவர் அவ்விடத்துத் திருக்கோவில் கட்டுவித்து நாள்விழா, சிறப்புவிழாவிற்கு வேண்டும் நிலம் பொருள் முதலான ஈந்தனர். இதுவே ஊருக்குத் தெற்கே யுள்ள சிதம்பரஈசுரர் திருக்கோவில் என்று சொல்லுவது.

இயற்கையிலுள்ள தில்லையும், காஞ்சியும் போல் இவ்விரண்டு திருக்கோவில்களும், முறையே தெற்கும், வடக்குமாக அமைந்திருக்கின்றமையானும், அவ்வூர்களில் தனித்தனி சென்று பெறும் பயன் இவ்வொரு வூரிலேயே இரண்டிடத்தும் வழிபட்டு அடையலாமென்பது போதருகின்றது.

இப் பிள்ளைத்தமிழையும் உலாவையும் பிழையறப் பரிசோதித்து அச்சிட்டு வழங்கிய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு இவ்வூராரனைவரும் நன்றி மிகப் பாராட்டக் கடமைப்படுகின்றார்கள். இக் கழகம் மேன்மேல் ஓங்கி வளருமாறு அறம் வளர்த்த அம்பிகை யருள்புரிவாளாக.

உ

குலசேகரன்பட்டினம்,
உ - கஉ - ளாஙூ

திருவள்ளுவரகம்
ப. இராமநாதன்.

# பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ரு | கஎ | அற்பர்த ஞட்டம் | அற்பர்த நாட்டம் |
| உக | ரு | சீல நிலா | சீத நிலா |
| உரு | க | சூலி நீலி | சூலீ நீலீ |
| ,, | ச | மாமாயி | மாமாயீ |
| ,, | ரு | உபகாரி நாரி | உபகாரீ நாரீ |
| ,, | சு | வாதி சத்திகல் } | வாதி சத்திகல் |
| | | யாணி வாணி } | யாணீ வாணீ |
| சசு | எ | வுடலுயிற்கமிர் | வுடலுயிர்க்கமிர் |
| | க0 | ளம்புலி | ளம்புலீ |
| | கஉ | தம்புலி | தம்புலீ |

திருச்சிற்றம்பலம்

குலசைநகர்

# அறம்வளர்த்தநாயகி

# : பிள்ளைத்தமிழ் :

## க. காப்புப்பருவம்

### திருமால்

நீர்கொண்ட தண்டுழாய்த் திருமாலை மாலய
 னிலாமாலை மாலைவண்ண
நித்தன்முத லெத்தனை யுயிர்த்தொகுதி யத்தனையு
 நீபெற்ற தாயென்றசொற்
சீர்கொண்ட நான்மறை பரவுபஞ் சாட்சரச்
 செல்வயைத் தென்குலசையூர்ச்
சிவகாம சுந்தரியை யறம்வளர்த் தவளேமக
 தேவியைக் காக்கபரவைப்
பார்கொண்ட சிற்றடிச் சுவடுகவ டில்லாத
 பத்தர்சித் தத்திருத்திப்
படைப்புயி ரனைத்துமொர் தினைத்துணைப் பொழுதி
 பழுதிலா மற்பரித்துத் [னும்
தார்கொண்ட குழலிருவ ரூடாம லீடேழி
 தான்வீற் றிருக்குமமுதத்
தண்கலைச் சுடர்வானி லொண்கதிர்ச் சுடர்வீசு
 சங்குசக் கரபாணியே. (க)

## சிவபெருமான்

### வேறு

கருவிமுகி றவழ் பொருப்பை வலிதிற் பெயர்த்துநீள்
கடலகடு கிழியநட்டு முறையிற் றிருப்பவே
கடவுளர்கை விடவுதித்த கடுவைத் தடக்கியே
கறைமிடற துடையகர்த்த ரெனுமற் புதத்தினர்
திரிபுரமு மதனுமுற்று மொழியக் கணத்திலே
சினவுதிரு நகைநுதற்கண் ணினர்பத்த ரத்தனர்
திகழ்கயிலை மலையிருப்பர் பொருகைக் கணிச்சியார்
திரிபதகை யவண்மணத்த சிவனைத் துதிப்பம்யாம்
நரமிருக வடிவெடுத் திரணியற் குறைத்தமா [பிற
னளினன்முத லெவர்களுக்கு முதன்மைச் சிறப்
பணலியுமடி யவர்நினைக்கு மளவிற் செலச்செய்வா
ணனவுகன வினுமபத்த ரிதயத்தி னுட்படாள்
குருமணிகண் மரைமலர்த்து வெயிலொத் தெறிக்கவே
குடவளை குவளைமலர்த்து நிலவைப் பரப்பவே
குலவுபக லிரவொழித்த வுலகத் துயர்ச்சிசேர்
குலசைநக ரறம்வளர்த்த கொடியைப் புரக்கவே.

## விநாயகர்

### வேறு

நெடியமதி ளிற்பொன் மண்டப நிலைபெற்றி ருக்கும்வா
னெழுபிறை மருப்பொ டைந்துகை நிலைபெற்ற வெற்ப
முடிவி லடியர்க்கு நன்கருண் முளரிப் பதத்தினன் [னன்
முதுமறை வழுத்து குஞ்சர முகனைத் துதிப்பநீள்

குடில சடிலத்தர் நஞ்சிடு குவளைக் கழுத்தினர்
குலசை வருகச்சி கொண் டவர் குழையச்செய் மைக்கண
டடவரைகள் சுற்று மம்புவி தருமப் பெருக்கின
டமிழறம் வளர்த்த சுந்தரி தமிழைப் புரக்கவே. (௫)

கந்தர்.

வேறு

அடலசுரர் படமகிழ்ச்சி யண்டருக் காக்கிட
வமர்செயயில் கையிலெடுத்து வந்தசத் தார்த்தனை
யமலனையென் னுளமிருக்கு மன்பனைத் தோட்டுறு
கடல்விடம தெனவுதித்த கஞ்சனைத் தேய்த்திடு
கருணைமுகின் மருகனைப் பிரபந்தனைக் கூத்துறு
கலபமயி றனைநடத்து கந்தனைப் போற்றுதும்
வடவரைவில் லினர்மணத்த மன்றலுக் கேற்றவள்
வழிபெறுமெய் யருள்விசிட்ட ரின்புறப் பார்த்தவண்
மனதிலடி யவர்நினைக்கு மன்பெனப் பூத்தவள்
குடவளைவெண் மதிமணற்செய் குன்றினிற் கொட்டுறு
குளிர்தரள முடுநிகர்ப்ப துண்டெனக் காட்டிய
குலசைநகரறம்வளர்த்த கொம்பினைக் காக்கவே. ௬.

இலக்துமிதேவி

வேறு

கடலைக் கவியி னடைத்த டைத்தகல்
லணையி னடற்படை நடத்தியே
கரபத் திருதச முகத்தன் மக்களொ
டழிய வொழித்தம ரருக்குநீள்

கவலைத் துயர்க ளகற்றி நற்குண
விபிடண னுக்கர சியற்றிமா
வடவெற் பெனத்தனு வெடுத்த லக்கும
ணனுமிதி லைப்பொனும் வரத்தமூர்
மகிழத் தயவினர் வரச்செய் தற்புத
மணிமுடி வைத்துல களித்தமான்
மருமத்துறவு றவிருக்கு மிலக்குமி
வனச மலர்ப்பதம் வழுத்துவாம்
நடனக் களிமயி னடத்து சுப்பிர
மணியனை யொக்கலை யிருத்தியே
நகிலத் தெழுவமு துளத்து மெய்ப்பொருள்
விளைய வுணப்பணும் விருப்பினு
னகையிற் றிரிபுர மெரித்த முக்கணன்
முதலினர் முத்தொழில் முளைத்தவோர்
கொடியிற் குழையு நுசுப்பி ளைத்திட
வளரு மிணைக்கன தனத்தினுள்
குரவைத் தொனிகுட வளைக்கி ளைத்தொனி
மணிமுர சத்தொனி மகிழ்ச்சிசேர்
குலசைப் பதியறம் வளர்த்த பொற்கொடி
யினிமை யிசைத்தமிழ் தழைக்கவே. (ரு)

துர்க்கை

வேறு

முத்தலை வேற்படை நீலி கலாதரி
முரிதி ரைக்கடல் வளைநி லத்தொடு
முச்சக மேற்கொடி தாமகி டாசுரன்
முடியி னிற்சர ணுறமி தித்தவண்

முக்கணி னூற்புய மானத பூரணி
முனைமு றுக்குள பிறையெ யிற்றின
ளூத்தியி னூற்பல வாகம மெய்யறி
வுடைய வித்தக ருளமி ருப்பவ
ளொத்த நிலாச்சடை யார்தமை யாடல்செ
யுரிமை முற்றிய பெருமை பெற்றவ
ளுத்தர வாய்ச்செல்வி வீரம னோகரி
யுபய பொற்பத மலர்வ ழுத்துதும்
நித்திய வாழ்க்கையர் காரண காரியர்
நிமலை யற்புத கமல லக்குமி
நிச்சய வாக்கின ளூன்மறை நூன்முறை
நிறுவு மெய்ப்பொரு ளருளி சைக்குயி
னெட்டுள மாக்கொடி யூர்திய தாமென
நிலைநி றுத்தயி லறுமு கற்கனை
யத்தமி லாச்சொலி னோர்செயு மாணவ
அறவெ றுத்தவள் புவன ரட்சகி
யற்பர்த ளூட்ட மடாதவள் பேருண்மை
யடிய ருட்டனி குடியி ருப்பவ
ளத்திர வாட்கணி வாணகை வாணுத
லறம்வ ளர்த்தவ டமிழ் தழைக்கவே. (சு)

வடுகன்

வேறு

உருமுக் குரல்படு துடிவைத் தொருகர
மொள்ளிரக் கனல்விழி யூக்கியே
யுறுமுத் தலையடு கழுமுட் படையொரு
கையினிற் றிரியவு லாத்தியே

யுதயக் கதிரென மணிநெட் டரவணி
யொருகைத் தலமிசை சேர்த்தியே
மரையிற் குடிபுகு விதிகட் டலைமலை
வளர்கைத் தலமெதிர் காட்டியே
மலைசுற் றுலகினில் ஞமலிப் பரிமிசை
வருமுக் கிரபுய வீட்டினன்
வடிவிற் கரியவ னடியற் குயிரென
வடுகக் கடவுளை வாழ்த்துவா
மரவப் பகிரதி சுழலச் சடையுடை
யவிழப் பரிபுர மார்க்கவே
யணுகிச் சிவசிவ வெனுமுத் தர்கள்வினை
யகலப் பதமெதிர் தூக்கியே
யணிபொற் சபைமுழ வதிரச் சகதல
மதிரப் பவரித கூத்தனர்
குருகிற் பொலிகர மலர்தொட் டணைசிறு
குதலைக் கிளியெனை யாட்கொடாய்
குணவிற் புரையிரு புருவப் பெடைமயில்
குயின்முத் தமிழிசை வேட்கையாள்
குலசைப் பதியுமை யவண்முப் படிதரு
கொடியைப் பரிவொடு காக்கவே. (எ)

ஐயனர்
வேறு

புள்ளரசின் மேற்கொண்ட பூவரசி கொண்கனும்
பொன்னரசு நாடுகாக்கும்
புருகூதன் முதலமர ரமுதுண்ண விடமுண்ட
புண்ணியனு முதவுசுதனை

வள்ளமுலை யிருவருக் கொருகொழுந னேச்சாத
வாகனனை யயிராணிதன்
மரபுகாத் தவனைத் தமிழ்க்குலசை நகர்வாழ
வந்தவை யனைத்துதிப்பாங்
கள்ளவிழ் மலர்ப்பொழி லெழிற்சிமய விமயமேற்
கைப்பிடித் திடுகணவர்பொற்
கால்பிடித் தம்மிமிசை வைத்தருந் ததியன்று
காட்டவெதிர் கண்டவவளைத்
தள்ளரிய கற்புநிலை பெற்றுமலை வற்றுமுச்
சகமெலாம் போற்றமுற்றுந்
தாபித்த மகதேவி யம்மையுமை யறம்வளர்த்
தவளிசைத் தமிழ்தழைக்கவே. (அ)

### நாமகள்

சித்தமும் புத்தியு மனமுமாங் காரமுஞ்
செயலுமுறை யும்பொருந்தித்
திரிபுவன வுயிர்தொறு மிருந்துவிளை யாடியுந்
தெரியாத சின்மயத்தைக்
கொத்தலர்க் கொந்தளச் சிந்துரத் திருநுதற்
குறுநகைப் பெண்ணரசியைக்
குலசேக ரப்பட்டி னத்தறம் வளர்த்தபொற்
கொடியைப் புரக்கவிசையுஞ்
சத்தமுஞ் சகலகலை யத்தமுஞ் சாவித்ரி
காயத்திரி மந்திரமுமுச்
சங்கத் தமிழ்ப்பனுவ லாட்டியெனு நாமமுஞ்
சட்சமய முழுதுமெழுதும்

வித்தகம் விரித்துத் தரித்தகர மும்படிக
மெய்யு மெய்யும்படைத்த
மெல்லரும் பலர்வட்ட வெள்ளிமண் டபமொத்த
வெள்ளைவெண் கமலத்தளே. (சு)

இந்திரன்

வெண்டிரைத் தமரக் கருங்கடற் செந்துவரின்
விழுதுபட் டொளிபழுத்து
மின்னுபின் னற்குடில மோவிப் பரானந்த
வெள்ளத்தி னுள்ளத்தின்மேற்
கொண்டிருக் கும்பொருளை வரபூத ரத்தைக்
குணக்கடலை வேதமுடிவைக்
குலசேக ரப்பட்டி னத்தறம் வளர்த்தபொற்
கொடியைப புரக்கவேலை
மண்டலத் துறுசிகர வரைகள் மேற் கொண்டெழா
மற்சிற கறுத்திருத்து
வச்சிரத் தாற்பொருது விருதுகொண் டெதிரிட்டு
வந்தவரை வென்றடக்கி
யண்டருக்கும் மிந்தி ராணிக்கு நாலுகோட்
டயிராவ தத்துக்குநீ
டைந்துதரு வுக்குமின் னமுதுக்கும் வேந்தான
வாகண்ட லக்கடவுளே. (எ)

முப்பத்துமுவரும் பிரமதேவரும்

ஆதித்தர் பன்னிருவர் காளகண் டத்திறைவ
ரைந்தாறு பேர்வசுக்க

ளானத வெண்மரெழு மேனாளி லன்றவ
தரித்தவச் சுனியிருவரும்
போதிற் பொருந்தியிர ணியகற்ப முஞ்செய்து
புவனப் படைப்புயிர்கடம்
புண்யபா வத்தின்வழி யொழுகவெழு தியவிதிப்
புத்தேளி ருங்காக்கபொற்
சோதிக் கொழுங்கதிர் விரிக்கும்வட வெற்பெடுத்
துக்குனித் துச்சிரித்துத்
துட்டர்புரம் வெந்துபொடி பட்டொழிய வடும்
சோதிசெம பாதியுடனு [விடைச்
மாதிக்குடன் சகமணைத்து நின்றொளிர் பச்சை
மரகதச் சுடர்பரப்பி
வந்துகுடி கொண்டமக தேவிசுந் தரியறம்
வளர்த்ததே வியைமுழுதுமே. (௰௧)

காப்புப்பருவம்
முற்றிற்று.

## உ. செங்கீரைப்பருவம்

விம்பச் சிவந்தவா யம்மைமே ணுதேவி
வெற்பரசி கற்பரசிபொன்
மேகலையொ துக்கிமடி மீதுற விருத்திமுலை
விம்மிவழி யும்பான்முதற்
கம்பிக்கும் வேலைத்த ரைப்பெய்து பெய்தசங்
கைக்கொண்டு பால்புகட்டிக்
கைச்சங்கை மும்முறை சிரஞ்சுற்றி யொருமுறை
கவிழ்த்தி யுடலங்குலுக்கிக்
கும்பக் களிற்றெருத் தத்திற்றி ருத்தமொடு
கொணருநீ ராட்டிமஞ்சட்
குளிர்நிலக் காப்பிட்டு நெய்பொத்தி வட்டக்
குதம்பையிரு குழையிலிட்டுச்
செம்பொற் பசுந்தொட்டில் வைத்துவைத் தாட்டு
செங்கீரை யாடியருளே [மயில்
சீரைவள நாட்டுதமிழ் வீரைவள நாட்டரசி
செங்கீரை யாடியருளே. (க)

பொன்குலவு செங்கமல முங்குவளை யுஞ்சுரும்
புங்கரும் பும்பகழிநாண்
போர்விலென வுருவிலிக் குதவுசுனை வயலயலோர்
பொம்மலிற் கயல்குதித்து
மின்புரை கனிக்கதலி மடலொடித் துக்கமுகின்
மிடறுதட விக்கதிர்நிலா

மேகமட் டுஞ்சென்று மீண்டுமட வார்கணீர்
விளையாடும் வாவிபுக்குத்
தன்பெருமை யைச்சிறுமை யாக்கும்விழி யார்விழி
தனக்கொதுங் கிப்பதுங்குந்
தாமரையி லுறையுஞ்ச கோரம்ப றந்துவ
தனத்தைமதி யென்றுலாவுந்
தென்குலசை நகரறம் வளர்த்தசிறு பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
தெய்வநா யகியறம் வளர்த்தநா யகிதேவி
செங்கீரை யாடியருளே. (உ)

நீரைவள மாக்குசெங் கமலமுங் குவளைகளு
நிறைமடுவி லொருபருவரா
னெரிமருப் பெரிவிழிக் கவையடிப் பகடுகண்
ணீரினிற் படியவெடிபோ
யூரைவள மாக்குமதி மண்டலத் தொடுபலவி
னுட்கனியு முட்கனியுடைத்
தூடுருவி யாடுதிரை வானதிபு குந்துவரி
யுண்டுசூற் கொண்டெழுந்து
பாரைவள மாக்குமைக் கொண்டல்கிழி யச்சென்று
பாய்ந்ததிற் றேய்ந்ததுளியின்
பண்டைச் சுனைப்புனலில் வந்தச்ச மற்றுப்
பரர்க்கேற் றெந்நாளும்வாழுஞ்
சீரைவள நாட்டுதமிழ் வீரைவள நாட்டரசி
செங்கீரை யாடியருளே
திறம்வளர்த் தருள்வளர்த் தறம்வளர்த் தருடேவி
செங்கீரை யாடியருளே. (௩)

ஒற்றைவட மேருவொரு காலென நிறுத்திமே
லொளிரும் வெளிமுகடுமூடி
யுகந்தொறு முகந்திடும் பிரளயச் சலதிக
ளூம்புதுக் கும்புவனமே
சுற்றிலுங் கலனென வடுக்கிவைத் தண்டச்
சுவர்க்குளெழு வரைகள்நட்டுச்
சுடர்விளக் கிட்டெண் டிசைத்தலைவர் தம்மையத்
தொன்மையிற் சூழநிறுவிப்
பெற்றவுயி ரெண்பத்து நான்குநூ றாயிரப்
பெயர்குறை படாமலூட்டிப்
பித்தர்திரி யம்பகக் கத்தர்க்கு மின்பப்
பெருக்கமு தளித்தளித்துச்
சிற்றில்விளை யாடும்வளை யாடுகைப் பெண்பிள்ளை
செங்கீரை யாடியருளே
தென்குலசை நகர்வாழ வந்தவ தரித்தபரை
செங்கீரை யாடியருளே. (௪)

தலைவனைத் தன்னைவினை யைக்கண்டு சட்சமய
தர்க்கமெல் லாமறிந்து
சரியைகிரி யாயோக ஞானந்த ரும்பதந்
தனையுமறி வாலறிந்து
தொலைவரிய மாயப் பிரபஞ்சப் பகட்டுத்
தொடக்கைக் கடக்கவிட்டுச்
சுகானந்த வெளியொளியி லசையாது நிலைநின்ற
சுத்தர்சித் தத்திலமுதக்
கலைமதியு நதியுமிலை பொதியுமித ழியும்வேய்ந்த
கற்றைச் சடாதரரெனுங்

கண்டிதா கண்டிதக் கடவுளொடு குடிகொண்டு
கால்கொண்டு கதிகொடுக்குஞ்
சிலைநுதற் கயல்விழித் துடியிடைப் பெண்ணரசி
செங்கீரை யாடியருளே
தெய்வநா யகியறம் வளர்த்தநா யகிதேவி
செங்கீரை யாடியருளே. (ரு)

அன்றிற்க ரும்பெண்ணை யடியினு மடம்பினு
மலைகடற் கரைதிரையினு
மவரவர்கள் கொடுவந்த சினிசீ னும்பர
மடங்கிய விடங்கடொறுநீள்
குன்றைப் பெரும்பல கலன்களினும் வெண்மணற்
குன்றினுங் கைதைகளினுங்
குளிர்நிழற் சோலையினும் வலைஞர்வலை யினுமளவர்
குடிலினும் பண்டம்விற்கு
முன்றிற் பெருஞ்சாலை நிலையினும் பலர்சிலர்கள்
முந்திவரு சந்திகளினு
முள்வாய் முனைச்சங்க மாயிரஞ் சுற்றிட
முழங்கொலி வலம்புரிவலஞ்
சென்றிட்ட முடனுலவு தென்குலசை யுமையம்மை
செங்கீரை யாடியருளே
சிவசத்தி சிவஞான சத்திவா லாசத்தி
செங்கீரை யாடியருளே. (சு)

கருந்தலைச் சாரிகைகள் செவ்வாய்ப் பசுங்கிள்ளை
கற்பனைச் சொற்சுவைபெறுக்
கந்தருவ ரேழிசைகள் சூழிசையி னியாழிசைகள்
காநரம் பலதுதொனியாய்ப்

பொருந்தும் புழைக்குழலி ஞெலியுங் கடிப்பிடும்
பொம்மலுஞ் செம்மையல்ல
பொருவருங் கஞ்சத் தெழுந்தோனி விருப்பிலம்
புதிதன்று தேவபாணி
பருந்துநிழ லுங்குழலு மோசையும் போலவிப்
பகிரண்ட கோடியெல்லாம்
படரும் பரஞ்சோதி யிச்சித்த நிச்சயப்
பழுதின்மொழி தொழுதுவேட்டோந்
திருந்துசெம் பவளவிதழ் வெண்முறுவல் வாய்விண்டு
செங்கீரை யாடியருளே
தென்குலசை நகரறம் வளர்த்தமக தேவிநீ
செங்கீரை யாடியருளே. (எ)

வேறு

கால்வளை தண்டை சிலம்பு சதங்கை
கலின்கலி னென்றாடக்
கைவளை யாடக் கிரணம் வளைந்த
கலன்கள் புரண்டாடச்
சூல்கலை புயலென வுச்சி மிலைச்சிய
சூழிய மீதாடச்
சுட்டியும் ரத்னப் பட்டமு மாடச்
சுற்றிய பட்டாட
வேல்வளை கண்ணியர் பண்ணிய ரன்பு
மிகுந்து புகுந்தாட
மெய்யெழி லாடப் பொய்யிடை யாடிட
வேர்வை துளித்தாட

வால்வளை நிழலென வுலகு புரந்தவ
ளாடுக செங்கீரை
யறத்தை வளர்த்த தமிழ்க்குல சைப்பரை
யாடுக செங்கீரை. (அ)

மின்புரை சிற்றிடை மங்கையர் முப்பொறி
வென்றார் நின்றார்பார்
மேலம ரேசர்கள் காமலர் தூய்மறை
விண்டே கண்டார்பார்
அன்பர் விருப்பள வுங்க்ருபை வைத்தவ
ரன்பால் முன்பானு
ராகம வேதபு ராணிகர் தாடொழு
தந்தா வந்தார்பார்
நன்கு மதித்து மிகுந்த கவித்துவர்
நங்கா யிங்கானார்
நாவலர் காவலர் நாடொறு நீசெயு
நன்றாய் கின்றார்கேள்
தென்குல சைப்பர மன்கை பிடித்தவள்
செங்கோ செங்கீரை
தேவர்கண் மூவர்கள் யாவரு மானவள்
செங்கோ செங்கீரை. (கூ)

புன்சென னத்தெ னுளம்புக விச்சை
புரிந்தாய் செங்கீரை
புண்ட ரிகப்பிர மன்பரி சுத்தர்
புகழ்ந்தாய் செங்கீரை
தன்கண வர்க்குநல் லின்பம ளித்திசை
தந்தாய் செங்கீரை

தண்டுள வத்தொடை விண்டவ னுக்கொரு
தங்காய் செங்கீரை
வன்பகை யிற்சுழ லன்பர்த மக்கெதிர்
வந்தாய் செங்கீரை
மண்டல வட்ட மழிந்தலை புக்கினு
மங்காய் செங்கீரை
தென்குல சைப்பதி யம்புய லட்சுமி
செங்கோ செங்கீரை
திங்கண் முடித்த சிவன்கை பிடித்தவள்
செங்கோ செங்கீரை. (௰)

செங்கீரைப்பருவம்

முற்றிற்று.

# ௩. தாலப்பருவம்

காரார் குவளைத் துணைவிழியைக்
கையாற் பிசையச் செங்குவளை
கடுத்துக் கலங்கிப் புனறதும்பக்
கண்டு முலைத்தாய் மலைத்தாய்தன்
வாரார் முலையூ டெடுத்தணைத்து
வதனத் தணைத்து முத்தமிட்டு
வயிறு நிரம்பப் பால்புகட்டி
மடிமீ திருத்தித் திருத்தியொலி
சீரா ரருவி நீராட்டித்
திரம்பா ராட்டிப் பணிபூட்டித்
திருக்கண் மலர்க்கஞ் சனந்தீட்டிச்
செம்பொற் றிருமா லிகைசூட்டி
யாரா ரெனத்தா லாட்டியகண்
ணுட்டி தாலோ தாலேலோ
அறத்தை வளர்த்த வறம்வளர்த்த
வம்மா தாலோ தாலேலோ. (க)

நந்தா விருநூற் றிருபத்து
நாலு புவனத் தெண்பத்து
நான்கு நூறு யிரமுயிர்க்கும்
நடுநின் றெவர்க்கு மிதமகித
முந்தா தகன்று பிந்தாது
முன்னை வினையின் படிநடத்தி

முறையாய் நடத்தும் விளையாட்டு
முழுது நடத்திச் சகம்புரந்த
சிந்தா மணியே நீலரத்நத்
தெய்வ மணியே கண்மணியே
தெள்ளித் தெளித்த தெள்ளமுதே
தேனே மானே முக்கண்முக
மைந்தா மொருவர் காமவெப்ப
மாற்று மருந்தே தாலேலோ
அறத்தை வளர்த்த வறம்வளர்த்த
வம்மா தாலோ தாலேலோ. (உ)

வெப்பான் மெலியும் வழுதிதன்பால்
விருப்பாய்ப் புகுந்து சிவசமய
வெறுப்பா லழிந்து வெறுப்பான
வீண்பா தகராஞ் சமணர்தம்மை
இப்பா ரறிய வென்றுசம
ணெண்ணா யிரருங் கழுமுனையி
விருப்பா ரெனுஞ்சொற் படிகழுவி
னேற்றிச் சைவ நெறியொழுங்கு
தப்பா [illegible]மைத்து வெண்ணீறு
தரிப்பா ரிடத்திற் குடியிருக்குந்
த[illegible]ழப்பா வலனைச் சண்முகனைச்
சம்பந் தனைமைந் தனைமுலைப்பா
லப்பா வரசே யுண்ணெனும்பெண்
ணரசே தாலோ தாலேலோ
அறத்தை வளர்த்த வறம்வளர்த்த
வம்மா தாலோ தாலேலோ. (ங)

வடக்குங் குமக்கொங் கைகள்குலுங்க
மணிவாய் வெளுப்பக் கண்சிவப்ப
மடுவிற் படுநீர் குடைந்தாடு
மகளிர் விழியின் மருண்டுளஞ்சிக்
கிடக்குஞ் சினக்கெண் டைகளிலொரு
கெண்டை குதித்துக் கற்பகப்பூங்
கிளர்கொப் பொசித்துக் காமவல்லி
கிளையுந் தழையுங் கடந்துநிலா
நடக்குங் ககன விலஞ்சியினி
னுண்மீன் கோண்மீ னொடும்பொருது
நந்தா மகரா லயமிதெனு
நாம மறிந்து வந்துபுகுங்
கடற்குண் டகழி சூழ்குலசே
கரப்பட் டினத்தாய் தாலேலோ
கங்கா தரர்பங் கானவின்பக்
கனியே தாலோ தாலேலோ. (ச)

அத்தா யினுஞ்சீ ரசோதைத்தா
யணித்தாய்க் களவு கண்டுமத்தா
லடித்தாய் மகனே களவுசெய்தா
யாயி னினமு மடித்தாயா
கொத்தா யிருக்குஞ் சபையறியக்
கூறி விடுவேன் மாறிவிடு
குலத்துக் கீன முறையலநான்
கொடுப்பன் வேண துனக்கெனுஞ்சொ
லெத்தா லுரைத்தா ளித்தாயென்
றெண்ணு தனேகந் திருவிளையாட்

டெல்லாம் புரிவோ னுடன்பிறந்திங்
கெண்ணுன் கறமு வளர்த்திடுசெங்
கைத்தாய் புவனத் தாய்குலசே
கரப்பட் டினத்தாய் தாலேலோ
கங்கா தரர்பங் கானவின்பக்
கனியே தாலோ தாலேலோ. (ரு)

வேறு

மங்கு றவழ்ந்திடு மதிளிற் கோபுர
வாயிலில் வீதிகளில்
வண்டலை தண்டலை நிழலிற் கடலலை
வாய்க்கரை யிற்றிரையிற்
கொங்கலர் பங்கய மடுவிற் றெருவிற்
குமரர்க டங்தெருவிற்
குவளைக் குழியிற் கழியிற் புளினக்
குன்றினின் முன்றில்களிற்
றிங்க ளிளம்பிறை நுதலியர் பரதச்
சிரமக் கூடத்திற்
சினத் தவர்மலை யாளத் தவர்பலர்
சிலர்வரு சாலைகளிற்
சங்கு முழங்கு வளங்குல வுங்குல
சைத்தாய் தாலேலோ
சங்கரன் பங்கினு மெங்கு நிறைந்தவள்
தாலோ தாலேலோ. (சு)

போதுகண் மேய்ந்திடு மேதிகள் வாவி
புகுந்து மிகுந்தசுவைப்
புனல்பரு கிப்பரு கிக்கன் றுள்ளிப்
பொழியும் பால்பெருகிச்
சீல நிலாவிரி யும்பாற் கடலிற்
செறியக் கயமுழுதுஞ்
செங்கா லனமது கண்டு மகிழ்ந்திச்
சித்துச் செந்தமிழுக்
காதர மாகிய சொல்லும் பொருளு
மறிந்து பிரிப்பவர்போ
லாவிப் புனல்புற நீவிப் பயமுண்
டாசைப் பெடையுடனே
தாதவிழ் பங்கய மீதுறை யுங்குல
சைத்தாய் தாலேலோ
சங்கரன் பங்கினு மெங்கு நிறைந்தவள்
தாலோ தாலேலோ. (எ)

கந்த மலர்க்குவ ளைத்தளிர் மென்றிரு
கடைவாய் தேன்சொரியக்
கவையடி மேதிக ணிறைபுன லோடைக்
கயம திறங்கவெருண்
டந்தமில் சங்க மகன்று நிலாமணி
யணியுணி யாகவுமிழ்ந்
தன்னச் செந்நெற் கதிரரி விரிவய
லத்தனை யும்புகுதப்

புந்திம கிழ்ந்தரி வாரிக் கட்டிப்
போர்செயு மள்ளர்வளைப்
புதுமுத் தொடுநெற் பழமுத் துதிரப்
புதிதெனு மவைமுழு துஞ்
சந்திர னிற்கதிர் தந்த தமிழ்க்குல
சைத்தாய் தாலேலோ
சங்கரன் பங்கினு மெங்கு நிறைந்தவள்
தாலோ தாலேலோ. (அ)

துளவ முடித்தபண் ணவன்முதன் மற்றவர்
தூரா வேராவாய்
துன்ப மறும்படி வந்தரு ளென்றடி
சூழ்வார் பால்வாழ்வாய்
களப முலைத்துணை யுனதுப தத்துணை
காணார் காணாதாய்
கருணை மணங்கமழ் தருமலர் வந்துயர்
காவாய் பூவாவா
யளவிடு தற்கரி தரிதெனு மெய்ப்பொரு
ளாவாய் தேவாவா
யம்புவி தண்புனல் வெந்தழல் வாடையெர்
டானு வானுவாய்
தளவ நகைக்குயில் குலசை நகர்ப்பரை
தாலோ தாலேலோ
சங்கரி வால சவுந்தரி சுந்தரி
தாலோ தாலேலோ. (க)

வேறு

கொடுமு ணைத்திரி சூலி நீலி தாலேலோ
குமர ணைப்பெறு தாயே சேயே தாலேலோ
பிடிந டைக்குல மாதே போதே தாலேலோ
பிரண வப்பொரு ளாமா மாயி தாலேலோ
வடித மிழ்க்குப காரி நாரி தாலேலோ
வாதி சத்திகல் யாணி வாணி தாலேலோ
அடிய ருக்குயி ராவாய் பாவாய் தாலேலோ
அறம்வ ளர்த்த பொன் மானே தேனே தாலேலோ. ()

தாலப்பருவம்

முற்றிற்று

## ச. சப்பாணிப்பருவம்

எண்டிசைக் கைவரைகள் பதறும னிலைநின்ற
வெழுவரை நடுங்கி டாம
லிதுவரையு மெலியாத வடவரை குலுங்காம
லெவ்வரையு மதிரா மன்மேல்
விண்டலத் தவர்விழிகள் முகிழாம லலைவாரி
வெள்ளங் கலங்கி டாமல்
வேதனிலை வைகுண்ட நாதனிலை கயிலாச
விமலனிலை யசையா மலேழ்
மண்டலத் துறுசரா சரவுயிர்த் தொகையெலா
மருளாம லுலக மெல்லா
மறுகாம லொடொரு மயங்கா வனந்தனு
மனந்தளர்ந் தஞ்சி டாமற்
றண்டளிர்க் கைத்துணை வருந்தாமன் மெல்லநீ
சப்பாணி கொட்டி யருளே
தமிழறம் வளர்த்தவுமை குலசைநக ருக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே. (க)

மண்டார் கலித்திரைக் குண்டகழி நாப்பணொரு
வரைகொண்டு நட்டு விட்ட
மதிநடுத் தறியெனக் குழியம்பி னிறுத்திநெடு
வாசுகிக் கயிறு பூட்டி
உண்டான தானவர்க ளொருபக்கம் வானவர்க
ளொருபக்க நின்று சுற்றி

யோடதி கொடுத்துக் கடைந்திடக் கடல்வயி
றுடைந்ததிற் கோப விடமேற்
கொண்டார வச்சங் கொடுத்தாரை யுஞ்சென்று
கொல்லத் தொடர்ந்த கடுவைக்
குடங்கையி லெடுத்துணக் கண்டுபத றிக்கடவுள்
குருமணி மிடற்ற டக்குந்
தண்டா மரைக்கரங் கொண்டா தரித்துநீ
சப்பாணி கொட்டி யருளே
தமிழறம் வளர்த்தவுமை குலசைநக ருக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே. (உ)

குமிழ்மா மதித்திலத வதனமுஞ் சூழியக்
கொண்டையுங் கெண்டை விழியுங்
கொப்பிட்ட குழையுநில வொப்பிட்ட மூரலுங்
கோலமுந் திருவு தரமுஞ்
சிமிழா மெனச்சிறுத் துப்பெருக் குந்தனச்
செப்புமணி யாப ரணமுஞ்
செய்யபட் டுடையுமிடை யுங்கடக மிட்டபொற்
செங்கையுந் தாட்க மலமு
மமுதான மென்மதுர வார்த்தையுங் கண்டுகேட்
டம்பரத் தும்ப ரொடும்வந்
தன்றைக்கு மின்றைக்கு மவிர்மணிக் கைதொட்ட
வத்தர்பரி சுத்தர் கயிலைத்
தமிழா ரணத்தலைவர் பிரியா திருக்குமுறை
சப்பாணி கொட்டி யருளே
தாயறம் வளர்த்தமக தேவிகுல சைக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே. (௩)

குருமா மணித்திரள்கள் புரளவிரு கரையுங்
கொழிக்கும் பெருக்கா றுசங்
குத்தொனியொ டுந்தரங் கத்தொனியொ டுந்திரை
குரைகட லெனப்ப ரந்து
வருமார வாரப் புதுப்புன னிறைந்தேரி
மடைகடை திறந்து வெள்ள
மட்டினி னிறுத்தியணை கட்டிமுட் டாதகால்
வழிவழி திறந்து பாயப்
பெருமாக மட்டும்வளர் செந்நென்முத் துங்கரும்
பின்கணுவெ டித்த முத்தும்
பேரோசை வெண்சங்கின் முத்துந் துலங்கிப்
பிறங்கிச் சிறந்த செல்வந்
தருமான வீரைவள நாட்டரசி தேவரசி
சப்பாணி கொட்டி யருளே
தமிழறம் வளர்த்தவுமை குலசைநக ருக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே. (௪

விழுதுங் கொழுந்துமிள வெயிலும் பிறங்கியொளிர்
விரிசடைக் கிடைகி டக்கும்
வெண்டிரைக் கங்கைவெள் ளந்துள்ள வானந்த
வெள்ளமேற் கொள்ள வுலக
முழுதுங் குலுங்கவட வரையுங் குலுங்கமணி
முடியரவு நெறுநெ றென்ன
முப்பத்து முக்கோடி தேவர்களு முனிவர்களு
முறைமுறை வலஞ்செய்து தாள்
தொழுதுந் துதித்துமர கரசம்பு வேயருள்
சுரந்தருள் புரிந்தி டென்னச்

சுத்தநிர்த் தம்புரியு மத்தனுக் கின்பச
சுவைத்தேன் கொடுத்த டுத்துத்
தழுவுந் துணைத்தா மரைக்கரங் கொண்டுநீ
சப்பாணி கொட்டி யருளே
தமிழறம் வளர்த்தவுமை குலசைநக ருக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே. (ரு)

பானற் கருங்கட் சிவந்தவாய் வெண்ணிறப்
பதுமா சனத்தி ருக்கும்
பாமாது தனதுநுனி நாமா தெனக்கொண்ட
பழமறைக் கிழவன் முடிமே
லூனப் படப்புடைத் துலகப் படைப்பெலா
மொக்கப் படைத்திசை படைத்
துலகம் பரிக்குநாட் பிரமன் சிறைத்துய
ரொழித்திட வெளிக்குள் வந்த
கூனற் பசுங்கா யெருக்கலர் முடித்திடுங்
கோடீரன் மடியில் வைத்துக்
கொண்டுசெவி தாழ்த்துக் கொடுக்கவுப தேசங்
கொடுத்தகுரு பரனுக்கு முத்
தானக் களிற்றுக்கு முலையூட்டு மலைவல்லி
சப்பாணி கொட்டி யருளே
தமிழறம் வளர்த்தவுமை குலசைநக ருக்கிறைவி
சப்பாணி கொட்டி யருளே. (சு)

வேறு

வம்பைத் தருவெண் டும்பைச் சிறுமலர்
வானதி நுரையெனவே

மறுகிச் சிதறப் பதறிக் குளிர்தரு
மதிதடு மாறிமனம்
வெம்பிச் சுழலச் சுலவும் பணிமணி
வெயில்விரி மின்பிறழ
வெண்டலை மாலைக ளொன்றினொ டொன்றலை
மீதடி படவருமைச்
செம்பொற் சரணப் பரிபுர மதிரத்
திசையதி ரச்சபையிற்
றிருகும் பவுரித் திருநட னம்புரி
சிவன்மரு மந்தனிலே
கும்பத் தனம தழுந்தப் புணர்பவள்
கொட்டுக சப்பாணி
குலசைத் திருநகர் குடிபுக் கிடுமுமை
கொட்டுக சப்பாணி. (எ)

அருவுரு வாயுட ஞெறுமுயி ராய்நடு
வாதியு மந்தமுமா
யதுவிது வென்னுஞ் சுட்டாய் முட்டா
வன்பர் பெறுங்கதியா
யொருபொரு ளாகியு முறுபல பொருளா
யுள்ளது மில்லதுமா
யுணரும் பதிபசு பாசத் திற்பதி
யுள்ளுறை சின்மயமாய்த்
தெரிவரு மைம்பத் தோரக் கரமாய்ச்
சிவனயன் மாலெனுமுத்
தேவரு மாயுல கெங்குநி றைந்த
திகம்பரி சுந்தரிநற்

குருபர னைக்கய முகனைப் பெற்றவள்
கொட்டுக சப்பாணி
குலசைத் திருநகர் குடிபுக் கிடுமுமை
கொட்டுக சப்பாணி. (அ)

மலர்சுற் றியசுரு ணெகிழக் குறுவெயர்
வைத்துளி முத்தாட
மதுரித் திடுசிறு குதலைக் கிளியினி
மைச்சொல் வரக்கோவை
இலவத் துவரித ழமுதத் துளிவட
மிட்ட வுரத்தூர
விருகட் கடைகுழை சருவிச் சிறிய
வெழிற்குமி ழிற்றுவ
வொலிபற் றியபுது வளைசுற் றியதுணை
யுட்கை சிவப்பேற
வொளிர்சுட் டியுமணி யணிபட் டமுநுத
லுக்கிடை கொட்டாட
குலசைத் திருநகர் குடிபுக் கிடுமுமை
கொட்டுக சப்பாணி
குகனைப் புகரிப முகனைத் தருமுமை
கொட்டுக சப்பாணி. (௯)

அருளிற் பெரியவ ளடியர்க் கெளியவ
ளத்துவி தக்கோவை
யழகுக் கழகுசெ யிளமைச் சிறுகுயி
லற்புத மெய்ச்சோதி

கருணைக் கடல்கட லமுதச் சுவையுயர்
கற்பக நற்போது
கமலத் தொளிர்பத வுகளக் கிளியிரு
கட்பிடி பொற்பூவை
பெருமைப் பிரணவ வருமைப் பொருளிசை
பெற்ற தமிழ்த்தேறல்
பிறைவைத் திடுசடை முடிமுக் கணர்நிறை
பெட்புற மப்பேடு
குருகிற் பொலிதளி ரிருகைத் துணைகொடு
கொட்டுக சப்பாணி
குலசைத் திருநகர் குடிபுக் கிடுமுமை
கொட்டுக சப்பாணி. (௰)

சப்பாணிப்பருவம்

முற்றிற்று

# ௫. முத்தப்பருவம்

உப்பத்தி யிப்பிமுத் தூனிற் பொதிந்தமுத்
துயர்திரை மடக்கினிலிருந்
தூசலா டுங்குடக் கூனந்து தந்தமுத்
தொளிகுன்று வெளியமுத்துக்
கொப்பத் திறங்கிபக் கோட்டுமுத் தரிகொலக்
குப்புற்று திர்ந்தமுத்துக்
கோகனக முத்துவண் டறுகா துவைக்கக்
குழைந்தமுத்துச் செந்நென்முத்
திப்பத்தி னுலகி லியாவருங் கைக்கொண்ட
வெளியமுத்துக் கன்னன்முத்
தெம்முத் தினுங்கூட வெண்ணுமுத் திவையெலா
மென்னமுத் திவைவிரும்போ
முப்பத்தி ரண்டறம் வளர்த்தமக தேவியுன்
மூரல்வாய் முத்தமருளே
முத்தமிழ்க் குலசேக ரப்பட்டி னத்திறைவி
மூரல்வாய் முத்தமருளே. (௧

தத்துந் திரைக்கடற் பள்ளத் திறங்கிச்
சலாபங் கொழிக்குமுத்துச்
சங்கீன்ற முத்துக் குதிக்கும் பெருஞ்சுறுத்
தாய்முத்து வேய்முத்துமீன்
கொத்துங் குரண்டவெண் டலைமுத்து மைப்புயற்
குளிர்முத்து வேழமுத்துக்

குழையும் பசுஞ்சாலி முத்துமத வாரணக்
கோட்டில்விளை முத்துமதனன்
புத்தம் பெனுங்கமல முத்துமடல் விரிபசும்
பூகத்தின் முத்துமின்னார்
பூணிட்ட களமுத்தி யாமிட்ட மெனுமுரை
பொருந்தோ மலைக்குட்படா
முத்தம் பதித்தசெம் பவளவெள் ளத்தைநிகர்
மூரல்வாய் முத்தமருளே
முத்தமிழ்க் குலசேக ரப்பட்டி னத்தரசி
மூரல்வாய் முத்தமருளே. (உ)

கோண்டமுழவு மிருகோட்டி ஞெருபிறை தரித்திடுங்
கோடீரர் பாரகச்சி
கொண்டபாண் டீசுர ரளந்தவிரு நாழிநெற்
கொண்டறம் வளர்க்கும்விரதம்
பூண்டவ ரவர்க்குள்ள படியினெள் ளளவும்
புறம்போய் விடாமலூட்டிப்
பூகண்ட நவகண்ட வாகண்ட லன்றிருப்
பொன்னுலகு மெவ்வுலகமும்
நீண்டகட லுந்திரையு மணியுமொளி யும்பொழிலு
நிழலுமென வெக்காலமும்
நீங்காம னின்றுவிளை யாடும் பராசக்தி
நித்தியகல் யாணிபஞ்ச
பாண்டவர்கள் தூதான வாண்டவர் சகோதரி
பவளவாய் முத்தமருளே
பரவுகுல சேகரப் பட்டினத் துமையம்மை
பவளவாய் முத்தமருளே. (௩)

காயுங் கதிர்க்குவாய் விள்ளுமள் ளற்பசுங்
காற்கமல மேகறித்துக்
காவிவா விப்படிந் தெழுமேதி தன்குழக்
கன்றுக் கிரங்கி யோடிப்
போயுந்தி வெள்ளங் கடந்துமுலை விம்மிப்
பொழிந்தபால் முழுதும் வாசப்
பூவுடைந் தொழுகுதே னற்றொடு கலந்துமைப்
பூகத் திடம்புகுந்து
சாயுங் குலைச்செந்நெல் வயறொறு நடந்துசெந்
தாமரைக் குளநிரப்பித்
தண்கதலி வைப்பெலாஞ் சென்றுமக ராதிகள்
சலஞ்சலம் வலம்புரியுணப்
பாயுந் திரைக்கடற் குலசேகரப் பட்டி
னத்தரசி முத்த மருளே
பாண்டவர்கள் தூதான வாண்டவர் சகோதரி
பவளவாய் முத்த மருளே. ௬

வேறு

ஈரப் பிறைவா ணுதற்கனியே
யினிய சுவையற் புதக்கனியே
யெண்ணெண் கலையு முடையவளே
யிருநாற் றிசையு முடையவளே
பாரக் கதிர்வேற் படையனமே
பதுமா சனத்தின் புடையனமே
பைய நடந்து வரும்பிடியே
பரவார் சுழல வரும்பிடியே
காரிற் பிறழுங் குழலாளே
கருப்பம் புகுந்தங் குழலாளே
கையாற் றொழுவார் மருங்கணியே
கர்த்தாண் டருள மருங்கணியே

தாரப் பொருப்பார் விருப்பமுறுந்
தனத்தாய் முத்தந் தருகவே
தமிழ்த்தென் குலசை யறம்வளர்த்த
தாயே முத்தந் தருகவே.

புலவே கமழும் புனல்வாரி
புதுமுத் தெறியுங் கரைவாரி
புவன முழுதும் விரும்பவளம்
பொருந்தும் பொருந்து மரும்பவளம்
பலதே சமுஞ்செய் தொழில்புரியும்
பயிலுஞ் சங்கு வலம்புரியும்
பாதை பசும்பொன் மணித்துவரும்
பலபண் டமுங்கொண் டணித்துவரு
மலர்மான் கலாப மம்புயப்பூ
மன்னர் பொறுக்கு மம்புயப்பூ
மதுரத் தமிழு மெய்யிருக்கு
மணக்கு மனுநூற் குடியிருக்குங்
குலசே கரப்பட் டினஞானக்
கொழுந்தே முத்தந் தருகவே
குயிலே யறத்தை வளர்த்தகுலக்
கொடியே முத்தந் தருகவே.

நாரத் தரங்கத் திரைப்பரவை
நலியக் கடைந்த சுராசுரர்க
ணடுங்கப் பிறந்த விடநுகர்ந்து
நகையிற் பகைஞர் புரமெரித்தும்
வீரத் துயில்மா லயனறியா
வேடமெடுத்து மயமெ டுத்தும்
வெள்ளைப் பிறையைச் சடைக்கணிந்தும்
வீயப் பிறையை யுடம்பளித்தும்

பாரக் கரியை யுரித்தியமன்
பதைக்க வுதைத்து மிசைமிகுதி
படைத்த கடவு ளுடலிலொரு
பாதி பகிர்ந்து கொண்டனிலா
மூரற் கனிவா யிதழ்குவித்து
முத்தந் தருக முத்தமே
முகுந்தற் கிளைய வறம்வளர்த்த
முத்தே முத்தந் தருகவே. ௭

விளரிச் சுரும்ப ரிசைமுரலும்
விரைப்பூங் கமலத் தவிசிருக்கும்
விதியு நதியு மதியுமணி
வேணிப் பிரானுஞ் சுதரிசனத்
துவளப் புயலும் புரந்தரனுந்
துளைக்கைக் களிற்று னென்றுநறை
தூற்றுங் கடம்பே சனுமதனுஞ்
சுற்றுந் திசையெண் மருந்தனத்திற்
றளர்சிற் றிடைப்பொன் முதன்மடந்
தையரு முயரு மறையுமொழி
தருமுச் சுடரு முயிர்த்தொகையத்
தனையு நினையும் பொருளான
மூளரிப் பதத்தாய் மறுவின்மதி
முகத்தாய் முத்தந் தருகவே
முகுந்தற் கிளைய வறம்வளர்த்த
முத்தே முத்தந் தருகவே. ௮

வேறு

செக்க மலத்தவி சிற்குடி புக்குயர்
சித்திர லட்சுமியே
சித்த மகிழ்ச்சி வரப்பர விப்புகழ்
சிட்ட ருளத்தமுதே

மைக்க ணருட்கடை யிற்சக மொக்க
வளர்த்திடு மெய்ப்பொருளே
மட்டவிழ் கட்டலர் சுற்றி முடித்த
மலர்க்குழன் முத்தரசே
சக்கர வத்தினொ டுற்பவ நித்திய
தத்துவ வற்புதமே
சட்சம யத்தினு மற்றினு மொத்துறை
தற்சொரு பத்தினளே
முக்கண ரிச்சை மிகுத்த விசைக்குயின்
முத்த மளித்தருளே
முற்று தமிழ்க்குல சைப்பதி யுத்தமி
முத்த மளித்தருளே. ௬

வேறு

பிறைநு தற்சுந் தரிய ருட்கண்
பெருக முத்தந் தருகவே
பிழைபொ றுத்தன் பரைவ ளர்க்கும்
பெரியண் முத்தந் தருகவே
பொறை நிலத்தொன் றிமைய வெற்பின்
புதல்வி முத்தந் தருகவே
புகழ்கொ டுக்கும் பொருள்கொ டுக்கும்
புவனை முத்தந் தருகவே
சறுவ ருக்கும் பொதுவி னிற்குந்
தலைவி முத்தந் தருகவே
தளிர டிப்பெண் கொடிம ணிப்பைந்
தருணி முத்தந் தருகவே
கறைமி டற்றெண் புயன்ம ணக்குங்
கவுரி முத்தந் தருகவே
கருணை கைக்கொண் டறம்வ ளர்க்குங்
கருணி முத்தந் தருகவே. ௭

முத்தப்பருவ முற்றிற்று

# ௬. வாரானைப்பருவம்

சொற்கொண்ட வேதாந்த மருவுசித் தாந்தஞ்
சொலுமபர ஞானமாக
துரியங் கடந்துபர நாதவெளி மேற்கொண்ட
சோதியை யணுதியைத்திண்
கற்கொண் டெறிந்திடும் பத்தருக் கும்பர
கதிப்பொருள் கொடுக்குமுதலைக்
கண்ணுக்கு மெண்ணுக்கு மெட்டாத மூன்றுகட்
கனியைஞா னக்கொழுந்தை
விற்கொண்ட திருநுதற் கயல்விழியின் வெண்ணகையின்
மெள்ளவுள் ளாக்கியழியா
மெய்யும் பகிர்ந்துபணி செய்யும் படிக்கருள்செய்
வித்தாரி விதரணமெய்பூண்
மற்கொண்ட தோட்டுணைத் தாசரதி பின்வந்த
மாசரதி யேவருகவே
மங்களகல் யாணியே தென்குலசை நகரறம்
வளர்த்ததிரு வேவருகவே. (௧)

வாலப் பிறைச்சிந் துரத்திரு நுதற்றெய்வ
மகளிரொ டெதிர்த்திருந்தம்
மணைபந்து பொற்கழங் காடிவிளை யாடிவளை
யாடுங் காஞ்சிவப்ப
வேலக் குழற்சுற்று நெகிழவிரு கைவழியி
னிருவிழிகள் போகமீள

விடுபதத் தண்டையம் மாமெல்ல மெல்லென்
றிரங்கவிம யத்தாயறிந்
தாலக் கருங்கணீர் நீங்குமென வாங்குபந்
தம்மனை கழங்கொளித்தங்
கப்பருவ மிப்பருவ மலவென் றெடுத்தணைத்
தச்சமற வுச்சிமோக்குங்
கோலப் பசுங்கிளிப் பிள்ளையே வரிசைக்
குலக்கொழுந் தேவருகவே
குலசேக ரப்பட் டினத்திலே வந்துகுடி
கொண்டநா யகிவருகவே. (உ)

பதுமமல ரேமலரின் மணமே மணக்கும்
பைந்துணர்க் கற்பதருசூழ்
பந்தரிற் படரும்இள வஞ்சியே கிஞ்சுகப்
பவளவாய்ப் பைங்கிள்ளையே
கதிரொளி விரிக்குமொரு கடவுண் மணியேமர
கதக்கொழுந் தேசெழுந்தேன்
கனியுமினி மைச்சுவைக் கனியே திருப்பாற்
கடற்குளெழு தெள்ளமுதமே
சதுர்மறையின் மூலமே யறிஞரனு கூலமே
தண்கலை நிறைந்தமதியே
தன்மார்த்த மோட்சமே சாலோக சாமீப
சாரூப சாயுச்சயமே
மதுரகவி வாணிதொழு மங்களகல் யாணியே
மகதேவி யேவருகவே
வாடாமல் வீணர்வள நாடாள வந்தறம்
வளர்த்தசுந் தரிவருகவே. (௩)

தண்டையும் பரிபுரமு நவமணி தரித்திடு
சதங்கையு மிரங்கவிருதாட்
டாமரைகன் றக்குரம் பைசெய்து செய்துகைத்
தளிர்சிவப் பச்சூழியக்
கொண்டையுஞ் சுற்றவிழ நுதலிரு விளிம்பினுங்
குறுவெயர் துளிப்பரத்நக்
கொப்பசைய மிக்கமுக் குத்திமுத் தொளிவிடக்
கொடியிடை துவண்டுமறுக
விண்டைவந் துயரிமய வெற்பின்முற் றத்தினும்
வீதியினு மோடியோடி
விளையாடி மேனியெல் லாம்புழுதி யாடுமிவ்
விளையாட் டயர்வொழிந்து
வண்டையுந் தேனையுந் தணவாத பூங்கூந்தன்
மலரன்ன மேவருகவே
வைத்தபடி நாலரையின் முப்பத் திரண்டறம்
வளர்த்தசுந் தரிவருகவே. (௪)

நீடாழி யுலகத்து நடுநின்ற வடவரையை
நிமிர்தனு வெனக்குனித்து
நெட்டுடற் றுளையெயிற் றரவைநா ணுக்கிவின்
னிறையமுறை யிற்பூட்டிமே
லோடாத வொழியாத தாரணித் தேரணிய
துச்சியிற்பா தம்வைத்திவ்
வுலகும்விண் ணுலகுமுண் டுமிழுந் துழாய்ப்பகழி
யொன்றெடுத் தெக்காலமும்
வீடாத வேதமு முப்பத்து முக்கோடி
மெய்த்தே வரும்பராவ

வெப்புநாண் கொண்டோம்பு வீறுநினை யாமலது
வேளையின் மறுத்தொறுத்துக்
கூடார் புரத்தைச் சிரித்தெரித் தவரிச்சை
கொண்டசுந் தரிவருகவே
குலசேக ரப்பட் டினத்துக்குள் வந்துகுடி
கொண்டநா யகிவருகவே. (௫)

வேறு

சலசே கரவா ரிதித்திரைவெண்
டரளங் கொழிக்குங் கரைதொறுஞ்சஞ்
சரிக்குங் கவைக்கால் வரியலவன்
றுளாற் கிளைத்த குழியிடறி
நிலவே பொழியுங் குடவளைக
ணிலையு மலையுங் கடந்துவளை
நிழலிற் றவழ்ந்து கமலமடு
நீரிற் புகுந்து பகிர்ந்துழவின்
பலசீர் நடக்கும் வயனடவிற்
பரந்து நிரந்த வீதியிற்போய்ப்
பருமுத் துமிழ வந்தமுத்தம்
பகலும் புகறண் கதிர்பரப்புங்
குலசே கரப்பட் டினத்துவஞ்சிக்
கொடியே பிடியே வருகவே
கொன்றை முடித்துக் கொண்டகச்சி
கொண்டா ரிடத்தாய் வருகவே. (௬)

உலகத் துறுதி யறிஞருளத்
துள்ளே ருசிக்குந் தெள்ளமுதே
யொக்கப் படைத்துக் காத்தழிக்கு
மொழியாத் தொழின்மூன் றுடையவளே
பலகற் பனையு நடத்தியசிற்
பரையே யுரையே சதுர்மறைகள்
பாடித் துதிக்கும் பழம்பொருளே
பருவமில்லாப் பரசமயக்
கலகக் கொடியா ரளந்தறியாக்
கருணைக் கடலே குணமலையே
கண்ணின் மணியே பசியமர
கதப்பூங் கொழுந்தே தொழுந்தலைமைக்
குலகற் பகமே படரும்வஞ்சிக்
கொடியே பிடியே வருகவே
கொன்றை முடித்துக் கொண்டகச்சி
கொண்டா ரிடத்தாய் வருகவே. (எ)

புலசட் சமய வொழுக்குவளம்
பொலிய வருக தரளவடம்
பூட்ட வருக நுதற்றிலதம்
பொறிக்க வருக குறிக்குமுண்மைப்
பலசற் சனங்க ளுன்வரவு
பார்க்க வருக சதங்கையிரு
பாதச் சிலம்பு கலின்கலெனப்
பைய நடந்து வருகசெம்பொற்
கலசச் சுவைப்பா லுண்டிமையாக்
கண்கள் வளர வருகமுழுக்

காத லடியார் கேட்டவரங்
கைமேற் கொடுக்க வருகதமிழ்க்
குலசைப் பதிவா ழறம்வளர்த்த
கொடியே பிடியே வருகவே
கொன்றை முடித்துக் கொண்டகச்சி
கொண்டா ரிடத்தாய் வருகவே. (அ)

வேறு

மறுமுகத்தொளிர் சிறுபிறைச்சடை
வரதர்கைக்கொளு மமுதமே
வடிவுடைச்சுரர் மகளிர்கற்பக
மலரெடுத்தணி சரணியே
குறுமுகைச்சத தளம்விருப்பொடு
குடியிருக்கும்வெள் ளெகினமே
குவலயத்தடி யவர்தமக்குறு
குறைதவிர்த்திடு மிறைவியே
உறுமுனைப்படை யனையதுட்டரை
யொருவுமுத்தம வரதியே
யுடலுயிர்த்தொகை வகைபிரித்தவ
னுடனுதித்தபெண் ணரசியே
அறுமுகத்தொரு கடவுளைப்பெறு
மமலைசிற்பரை வருகவே
யருள்வளர்த்துயர் பரகதிப்பொரு
ளறம்வளர்த்தவள் வருகவே. (கூ)

பிரமனுக்குமி தரிதெனப்புகல்
பிரணவப்பொருள் வருகவே
பிடிநடைக்குளிர் தளிரடிச்சிறு
பிறைநுதற்கொடி வருகவே
தரணியிற்சதுர் மறைவழுத்திடு
தருமவர்த்தனி வருகவே
சகளநிட்கள வுகளபொற்பத
சததளத்தினள் வருகவே
சிரகரத்தர வணிபொறுத்திடு
சிவன்மனைக்கிளி வருகவே
திருமுகத்திரு விழியின்முத்தொழில்
செயுமிசைக்குயில் வருகவே
அரவணைத்துயில் பரமனுக்கிளை
யவளெனக்குயிர் வருகவே
யமலைநித்திய வரதியுத்தமி
யறம்வளர்த்தவள் வருகவே. (௭)

வாராணைப்பருவம்

முற்றிற்று

## எ. அம்புலிப்பருவம்

நாளினம் பரவவரு வாய்நீயு மிவளுமே
நாளினம் பரவவருவாள்
நச்சுவார் பணியுளூறு வாய்நீயு மிவளுமே
நச்சுவார் பணியுளூறுவாள்
வாளுமா னுங்கண்ணி லுடையைநீ யிவளுமே
வாளுமா னுங்கண்ணிலுடையாள்
மாதிரவ மறுவையுடை யாய்நீயு மிவளுமே
மாதிரவ மறுவையுடையாள்
கோளினோர் பானிலா மானனீ யிவளுமே
கோளினோர் பானிலாமான்
குவலயம் விரித்தகலை யுடையைநீ யிவளுமே
குவலயம் விரித்தகலையா
ளாளுமுல காயுமொரு நீயுநிகர் வேறல்ல
வம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (சு)

முற்பக்க மூவைந்து பிற்பக்க மூவைந்து
முப்பதுதி னந்தினத்தின்
முன்பின்வாழ் வுந்தாழ்வு முடையைநீ யிவனுன்
முகப்பிரமர் விண்டுமுதலாத்
கற்பக்க டைக்கணெல் லாமழித்தும் பின்பு
கண்ணருளி னெண் ணுயிரெலாங்

கட்டளைப் படிபெற்று முற்றுமுற் றுமல்வளர்
கன்னிவிட மொழுகுபகுவாய்ப்
பற்பக்க மடையவங் காந்துகவ் வுங்கொலைப்
பாந்தட் பழம்பகையைநீ
பாந்தளெல் லாமிறைவி காந்தனுக் கணியுமா
பரணநீ யறிவைபகலு
மற்பக்க முங்கதிர் பரப்புமிழை யவளுட
னம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (உ)

ஓராழி யெழுபரித் தேராழி யுடனுறைந்
தொளிமட்கு நானிறைவித
னுதயாதி வருபருதி யாயிர மெனக்கிரண
முமிழ்பாத தண்டையருகே
நேராக வருவதெப் படியென் றுளஞ்சலையுன்
னிலவா யிரத்தினுந்த
ணிறைகதிர் பரப்புநகை நிலவுண்டு தேவிமுக
நிலவுண்டு தம்பமுன்பின்
பாராமல் வாரா திருந்தமதி யேதுகுறை
பட்டமதி யிவணினைத்தாற்
பண்டுபோற் றிருப்பாற் கடல்க டைந்துசம்
பாதிப்ப தருமையல்ல
ஆராயு மறுபத்து நாலுகலை வல்லியுட
னம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (ங)

மடலேறு கட்டைமுட் டாட்பா சடைக்கமல
மானனூர் தம்மறுவிலா
மதிவதன ராசிக்கு நாணியுஞ் சந்நிதியில்
வருமாதர் கையினிலெடுத்
துடலேறு கறைதுடைத் தொளியேறு வள்ளமென்
றுள்ளியெள் ளுநவர்களென்று
மோராடி யொன்றுனி செய்துபோ டுவதென்று
முத்திகொண் டஞ்சியஞ்சிக்
கடலேறி மலையேறி விடையேறு மிறைசடைக்
காடேறி மறுகிமறுகிக்
கள்ளரைப் போற்றிரிய வேண்டா முனக்கொரு
களங்கமு மடாதுவந்தா
லடலேறு வேற்படைக் கந்தனைத் தந்தவளோ
டம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (ச)

வித்தகர் விதித்தபடி வங்களி லடங்காத
வீரபத் திராவதார
வேகப்பிர ளயசண்ட மாருதம் வெளிக்கொண்டு
வேள்வியை யழித்தங்கிதன்
கைத்தலந் துண்டமிட் டாயிரஞ் செங்கதிர்க்
கடவுடன் பல்லுகுத்துக்
கமலத் தயன்சிரம றுத்திசை சிறுத்ததக்
கன்சென்னி கீழ்ப்படுத்தி
புத்தமுத முண்ணும் புரந்தரனும் வேறுருப்
பூண்டொழித் திடவடித்துப்

புகழ்வாணி மூக்கையும் போக்கியுன் னுடலுமண்
புரளப் புரட்டும்வேக
மத்தனையு மான்மருட் டிவள்பொருட் டல்லவோ
வம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (ரு)

கும்பக் களிற்றுரியி னேகாசர் வாகீசர்
குஞ்சிதப் பாதர்கச்சி
கொண்டபாண் டீசர்திரி பதகையவள் குடிகொண்ட
கோடீர மவுலிதாழ்த்துச்
செம்பொற் பதத்துணை வணங்கப் பிணங்கிச்
சினத்துதைப் பப்பதைத்த
சீரடி சிவக்கச் சிறுபிறைக் கோடுறச்
செய்தநோ யையுமறந்து
விம்பக் கனிச்செய்ய வாய்விண்டுன் யோகபலன்
மேற்கொண்ட நல்லகாலம்
விளையாட வாவென் றழைத்தனள் பிழைத்தனையிவ்
வேளையினி நாளையென்று
ஐம்பத்தொ ரட்சரச் சட்சமய நாயகியொ
டம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (சா)

வெளியாடு பொற்சபையின் மீதாடு பாகத்தர்
விரிசடைக் கங்கையென்னு
மிக்கபகை யாட்டியொ டிருந்துறவு பாராட்டி
வீறுபா ராட்டினதுமின்

னொளியா டகச்சிலம் பிடுதாள் சிவந்திட
வொறுத்ததுவு மிவள்முகத்துக்
கொப்பெனப் பெயர்படைத் ததுவுங் களங்கமென்
றுள்ளஞ்சி யலைமலைத்து
வளியாடு பஞ்சென்ன வங்குமிங் குந்திரியு
மதியற்ற மதியேசும்மா
வரவரிற் றாழ்வுகளெலாந்தீர்த்து நீடூழி
வாழ்வுதரு வாளிசைச்சீ
ரளியா டலங்கற் குழற்றெய்வ நாயகியொ
டம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (எ)

வரசுதரி சனனுமவ னுதரமடு வினில்வளரும்
வனசத் துதித்தவனுமோர்
மைக்கண்ணி யாலழகு மெய்க்கணெல் லாமுறு
மலர்க்கண்ண னுங்கணபணச்
சிரசினவிர் மணியுடைய வரவெட்டு மெட்டுத்
திசைக்கரியும் வரைகளெட்டுந்
திரையுததி யுஞ்சகல வுலகுமுயி ரும்பவுரி
திரியவிரி சபையினின்று
பரசுதா ணடமிடப் பன்னகப் பின்னலப்
பணியொடுஞ் சுலவமலைவாய்ப்
பதறிவெண் டலைமுழைக் குள்ளே பதுங்குவை
பதுங்காமல் வாழலாந்தே

வாசிகுல சேகரப் பட்டினப் பெண்மயிலொ
டம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (அ)

பூரணப் பேர்பெற்ற தொருநா ளிரண்டுநாள்
போக்குவர வறியாதநாள்
பூரணப் பேர்பெற்ற நாளும் பழம்பகைப்
பொங்கரவின் வாய்ப்புகுதுநாள்
வாரணத் துரியுத்த ரீயன் சடைக்கண்ணில்
வைத்தநாண் முதலுனக்கு
வளர்வு தளர்வின்றிநீ சுகமே யிருந்துதான்
வாழ்ந்தநா ளெந்தநாண்முற்
காரணச் செல்விதிரு நாரணற் கிளையமயில்
கண்முன்வா பெண்முன்வந்தாற்
கண்ணருளி லெண்ணரிய கவலையுந் தீராக்
களங்கமுந் தீர்ப்பளொருநா
ளாரணத் தலைவிபரி பூரணக் கவுரியுட
னம்புலீ யாடவாவே
யருட்கருணை மாதறம் வளர்த்தமக தேவியுட
னம்புலீ யாடவாவே. (கூ)

வேறு

கமலலக்குமி யுடனுதித்துல
கம்புகழ் மிசையாலே
கயிலைவெற்பிறை யடிமுடிக்கடை
கண்டவு ளுறையாலே

குமரனைப்பெறு மிவள்முகத்தெழில்
கொண்டுள வழகாலே
குவலயத்தெவர் களும்விருப்பொடு
கும்பிடு மதனாலே
சமர்விளைத்திடு மதனனுக்கொரு
தண்குடை யெனலாலே
தரணியிற்பல வுடலுயிர்களிர்
தந்தரு கலையாலே
அமலைதற்பரை தயவுவைத்தன
ளம்புலி வருவாயே
யறம்வளர்த்தவள் திருமுனிப்பொழு
தம்புலி வருவாயே. (௰)

அம்புலிப்பருவம்
முற்றிற்று

# அ. அம்மானைப்பருவம்

பம்பரஞ் சுற்றுவ தெனச்சுற்றி யின்னுயிர்ப்
பாங்கியரம் மனையெடுத்துப்
பாடியா டக்கண்டு கூடியா டுந்தொழிற்
பருவமறி யாளிவளென
உம்பரிங் கிகழ்வரவர் நிகரல்ல வவரைவிட்
டும்பர்மன முங்குலுங்க
வுலகத்தி லெண்பத்து நான்குநூ றாயிர
முயிர்த்தொகை யெலாங்குலுங்க
நம்பரமர் புகழ்பாடி நம்பரமர் செயல்பாடி
நம்பரமர் கருணைபாடி
நம்பரமர் செம்பொனம் பலநின்று கூத்தாடு
நடனப் பதங்கள்பாடி
அம்பரம் பொருவிழி பரந்தாட வொலியாடு
மம்மானை யாடியருளே
யறம்வளர்த் துலகாளு மறம்வளர்த் தவளேபொன்
னம்மானை யாடியருளே. (க)

குயின்மொழிப் பூமங்கை கயல்விழிப் பாமங்கை
கொடுவருமம் மனையுநீகைக்
கொண்டவம் மனையுமக் குணவிறைவ ரிற்பணி
குயிற்றியவம் மனைபொலியநீ
கயிலெடுத் தாடியிட சாரிவல சாரிவரு
காலைநீ லக்கண்ணொளியுங்

Office of the
Director of Archaeology
Madras

கனிவாயின் மூரலுங் கதுவவவை புயன்மதி
கலந்தெனை நலந்தழைத்து
மயிலியற் சாயனின் கைவரச் செம்மையாம்
வகைகண்டு தேவியுன்னம்
மணியெம தம்மனைநிறம் பெற்றதென் னென்னவம்
மனையாடு மரசியின்ன
மயில்விழிக் கடைதொடர் நகைமதிக் கதிர்படர
வம்மானை யாடியருளே
யறம்வளர்த் துலகாளு மறம்வளர்த் தவளேபொன்
னம்மானை யாடியருளே. (உ)

புண்டரம் புனைசிறிய துண்டவெண் பிறைவியர்ப்
புத்துளிக் கத்தமிழ்த்தேன்
பொழியுஞ் செழுங்குமுத வாய்மல ரின்முல்லைப்
புதுப்பூ வரும்புவிரிய
விண்டலர்ந் திடுகாந்தண் மெல்விரல் சிவப்பவிரு
விழியொளி பரப்பவாசம்
வீசுகுழன் மேகமுக பந்தியவி ழத்தவள
வெண்டரள வடமலங்கப்
பண்டரு மொலிப்பாத கிண்கிணி யொலிப்பமைப்
படிவவடி வந்துளங்கப்
பருவமின் னிடைதுவண் டொசியவிரு தாளைப்
பதித்துப் பெயர்த்துவைத்திங்
கண்டாண் டங்களு மசைந்தாட வொலியாடு
மம்மானை யாடியருளே
யறம்வளர்த் துலகாளு மறம்வளர்த் தவளேபொன்
னம்மானை யாடியருளே. (௩)

செங்கரஞ் சங்கபற் பங்குலவ வேதஞ்
சிலம்பச் சிலம்புகண்ணின்
செம்மையுங் கருமையும் வெண்மையு மிறைவர்முத்
தேவர்மெய் யெழில்கொடுப்பக்
கொங்கரும் புந்துணைக் கோங்கரும் பன்னபொற்
கொங்கைமணி யொளிவிரிப்பக்
குளிர்பசுந் தருவண்ண மரகதத் திருமேனி
கூறமா ருதெவர்க்குங்
கங்கணங் கட்டிக் கொடுக்குமருள் சுரபியைக்
காட்டநிதி மறையிறைவர்தங்
கதிர்மணித் தருகாம தேனுமுத லானவிக்
கவினெலாங் கொண்டவுன்பொன்
னங்கமெங் குங்குலைந் தாடநகை நிலவாட
வம்மானை யாடியருளே
யறம்வளர்த் துலகாளு மறம்வளர்த் தவளேபொன்
னம்மானை யாடியருளே. ௭

செம்பது மனுங்கரும் பதுமனுஞ் சொற்றிருச்
செங்கணெடி யவனுமடியுந்
திருமுடியும் வெவ்வேறு வடிவுகொண் டினமினந்
தேடியுங் காணப்படா
வம்படரும் வெண்டும்பை யம்படரு மதிவேணி
வாதர்பங் கினுமுகைப்பூ
மடல்விண்டு நறைமண்டு சிறைவண்டு குடிகொண்ட
வனசப் புதுக்கோவிலுந்
தம்பமென நம்புமெய் யடியரித யமுமுதிய
சதுர்மறையு நிறையுமுலகச்

சரவசர வுயிர்களுங் குறையாத வாழ்வுகதி
தருமந்த்ர ரூபவடிவா
மைம்பத்தெண் ணேழற்ற கோணத்து வாழுமுமை
யம்மானை யாடியருளே
யறம்வளர்த் துலகாளு மறம்வளர்த் தவளேபொன்
னம்மானை யாடியருளே. ௫

வேறு

இன்னிசைச்சொற் சுவைப்பசிய
வஞ்சுகமே குயிலே
யியலிசைநா டகமூன்று
மெழுதிவைத்த படமே
பன்னகபூ டணர்விரகந்
தீர்க்குமலை மருந்தே
பதினாறு நான்காகப்
பணித்தகலை மானே
பொன்னவிரு நூற்றுக்காற்
பூங்கோவின் மயிலே
புவனவுயிர்க் குயிராகப்
பொருந்துமொரு பொருளே
அன்னநடைப் பெண்ணரசே
யம்மனையா டுகவே
யறம்வளர்த்த நாயகமே
யம்மனையா டுகவே. ௬

கைம்மலர்ப்பைந் தளிர்சிவக்கிற்
றளிர்களெல்லாஞ் சிவக்குங்
கருணைவிழி கலங்கிலெழு
கடலுநிலை கலங்குஞ்
செம்மணித்தாட் டுணைபெயர்க்கிற்
சேடன்முடி பெயருஞ்
சிற்றிடைப்பொற் கொடிநுடங்கிற்
கொடிகளெல்லா நுடங்கு
மைம்மழைக்கொந் தளங்கலையின்
முகில்களெல்லாங் கலையு
மரகதமெய் குலுங்கிலுயிர்
வருக்கமெல்லாங் குலுங்கு
மம்மனைநீ யறிந்துமெல்லென்
றம்மனையா டுகவே
யறம்வளர்த்த நாயகமே
யம்மனையா டுகவே. எ

நாடகத்தாட் கடவுண்மன
நடந்துதொடர்ந் தாட
நடப்பநிற்ப வானசரா
சரவருக்க மாடச்
சூடகக்கைத் தளிராட
வளைகளொலித் தாடச்
சோதிமுகம் வெயர்வாடத்
துடியிடைதள் ளாட
வடகப்பூங் குழலாடக்
குறுமுறுவ லாட

விருவிழிகை வழிபோய்வந்
தெழிற்குழையூ டாட
ஆடகக்கொப் பசைந்தாட
வம்மனையா டுகவே
யறம்வளர்த்த நாயகமே
யம்மனையா டுகவே. அ

சேறடி தொட்டலர் கமலத் தயனுஞ்
சிவனுந் திருமாலுஞ்
சிந்தையில் வந்தனை பண்ணிப் பண்ணித்
தேடிய மெய்ப்பொருளே
பேறடி யார்கள் பெறும்படி வந்து
பிறந்த பெருந்தவமே
பெற்றும் வளர்த்துங் கன்னி யெனப்பெயர்
பெற்ற குலக்கொடியே
ஈறடி நடுவெனு மூன்று மறிந்தவ
ரிதயத் தெழுசுடரே
யிகபர மென்னு மிரண்டினு மொன்றி
யிருந்தவ ளேகுழன்மே
லாறடி வண்டுக ளேழிசை பாடிட
வாடுக வம்மனையே
யத்தர் தமிழ்க்குல சைப்பதி யுத்தமி
யாடுக வம்மனையே. கூ

வேறு

தண்டமிழ் தந்தென்முன் வந்துசொல் லென்றவ
ளம்மனை யாடுக வம்மனையே

சாமள ரூப சுபாவ சவுந்தரி
யம்மனை யாடுக வம்மனையே
கொண்டலி னின்றுல கங்கள் புரந்தவ
ளம்மனை யாடுக வம்மனையே
கும்பிடு மன்ப ருளங்குடி கொண்டவ
ளம்மனை யாடுக வம்மனையே
மண்டலம் விண்டல மெங்கு நிறைந்தவ
ளம்மனை யாடுக வம்மனையே
மாமறை நூன்முறை கூர்பரி பூரணி
யம்மனை யாடுக வம்மனையே
அண்டர்கள் தொண்டர்கள் துன்ப மகன்றிட
வம்மனை யாடுக வம்மனையே
யத்தர் தமிழ்க்குல சைப்பதி யுத்தமி
யம்மனை யாடுக வம்மனையே ௮

அம்மானைப்பருவம்

முற்றிற்று

## ௯. நீராடற்பருவம்

கங்கைசர சோதியமுனை வேகவதி காவிரி
கதிப்பொருனை சிந்துவுந்தி
காளிந்தி நீளுந்தி யெத்தனைசொ லத்தனை
கணக்கிலா நதிகள்புயலிற்
பொங்கிமேற் கொண்டுவே விறைநிலங் கன்னிபெய்
போதும்விழை வுறுநிலங்கைப்
போராழி மாறனில மோரா யிரங்கட்
புரந்தர னிலந்தலங்க
ளெங்குமீங் குங்குளிர் புனற்கிறை நிலங்காறு
மெய்திச் செழித்துலகெலா
மீடேற நிலைபணிக் கணிபாலை முல்லைமல
சேந்தித் திரைக்கையினாற்
பங்கய மடற்கைதை தந்துவந் தனைசெயும்
பரவைநீ ராடியருளே
பலருக்கு முத்திதரு குலசைப் பதிக்கவுரி
பரவைநீ ராடியருளே ௧

செக்கச் சிவந்தசெம் பவளமிதழ் காட்டமுரி
திசைபுருவ வடிவுகாட்டச்
சிறுதரள மறுவில்குறு நகைகாட்ட மோட்டார்மை
செய்யபுற வடிகாட்டநே
ரொக்கப் பொருங்கயல்கள் கண்காட்ட வொலிகாட்டி
யொளிகாட்டி வெளிகாட்டுநீ

ருட்கிடக் குஞ்சங்க மணிமிடறு காட்டமலை
யொலியலையின் முழுகுகுவடு
முக்கட் பரம்பரம ரிச்சித் திணங்குமிரு
முகிழ்முலைப் பெருமைகாட்ட
மோதியசை வலமுழுது மோதிவிரி வதுகாட்ட
முளரிப் பதங்கள் பரவிப்
பக்கத்தி னின்றரம் பையராடல் காட்டநீ
பரவைநீ ராடியருளே
பலருக்கு முத்திதரு குலசைப் பதிக்கவுரி
பரவைநீ ராடியருளே. ௨

நீலகண் டன்சதுர் முகப்பதும யோனிதிரு
நின்றுவிளை யாடுமார்ப
னிலைநின்ற முப்பத்து முக்கோடி தேவரொடிந்
நீணிலத் தெவரையுமெணு
மாலக மிகத்திரண் டொருவடிவு கொண்டுதான்
வந்துலை கழித்தசூரன்
மதமறத் துணைவரற வளமறச் செய்துசூர்
மாவெனுங் கொடியனைச்செவ்
வேலக முறச்சென் றிரண்டுபங் கிட்டவவ்
வேலையி லிரண்டிலொன்று
விருதுகொடி யொன்றூர்தி யென்றுகைக் கொண்டு
மிக்கசெந் தூரில்வாழும் [புகழ்
பாலகன் சந்நிதி முகாரம்ப குணதிசைப்
பரவைநீ ராடியருளே
பலருக்கு முத்திதரு குலசைப் பதிக்கவுரி
பரவைநீ ராடியருளே. ௩

துத்திவிரி படமகுட விடமொழுகு பகுவாய்த்
துளைக்கொலை யெயிற்றுநெற்றிச்
சூட்டரா வணிபொதுவி லாட்டராகம்மறைத்
துறையறியு மறிஞருக்கு
முத்திதரு மைந்துமுக முக்கணெண் டோட்கயிலை
முழுமுதற் பொருள்பிடித்த
மோகத்தி னுகத்தோர் பாகத்தின் வைத்தநாண்
முதலறம் வளர்க்குவிரத
நித்திய முறைப்படி நடத்திமுச் சகநிலை
நிறுத்தியெல் லாவுயிர்க்கு
நேர்நின்று நானென்று நீயென்றும் வேறன்று
நின்றபரை யேபராவும்
பத்தியடி யவர்செயும் பவமறக் கதிபெறப்
பாவைநீ ராடியருளே
பலருக்கு முத்திதரு குலசைப் பதிக்கவுரி
பாவைநீ ராடியருளே. ௪

சோமன் கதிர்ப்பருதி சுற்றும்வட வரைவில்லி
சொல்லுமுக முடிவிலெல்லாந்
தொலைவில்லி கயிலாச வில்லியொரு பொருளினுஞ்
சோர்வில்லி கைப்பிடித்த
மாமங் கலச்சுமங் கலியான வுன்கருணை
வாரிப்பெருக்கி னகமாய்
மண்டலமும் விண்டலமு மெண்டிசையு மெவ்வுயிரும்
வைத்தறம் வளர்த்தவுமைநீ
காமன் பதித்திலோத் தமையுருப் பசிமேன
கைப்பெணயி ராணிமுதலாங்

கன்னியர்கள் சாந்துபொற் சுண்ணமவை யேந்தியிரு
கைகொண்டு கால்வணங்கப்
பாமங்கை பூமங்கை மார்செங்கை பற்றியே
பரவைநீ ராடியருளே
பலருக்கு முத்திதரு குலசைப் பதிக்கவுரி
பரவைநீ ராடியருளே. ௫

மதியரவு விரவியணி வரதருத் தரகோச
மங்கைத் தலத்திருந்து
மறைமுடிவு நொடியுமொரு பொருளினடி முடிதெரிய
வாய்திறந் தன்றுனக்குக்
கதிபெற வுணர்த்திடுமவ் வேலைவே லைக்கொண்டு
கரியபெரி யவரைநிகர்செங்
கட்சூ ரனைத்தடிந் திடுகட வுளுன்குழற்
கண்ணிலறு காலளியின்வந்
ததிசயமெய் யுரையெனுமவ் வுரைகேட் டிருந்ததை
யறிந்திருவ ருக்குமன்றைக்
கருளிச்செய் சாபமோ சனமாம் படிக்குவிளை
யாடல்புரி யமலனருள்சேர்
பதிகாச முதியதமி ழதியரச னருமைமகள்
பரவைநீ ராடியருளே
பலருக்கு முத்திதரு குலசைப் பதிக்கவுரி
பரவைநீ ராடியருளே. ௬

வேறு

தவளத் தரளத் திழைத்ததொட்டி
றன்னிற் கிடந்து கண்வளர்ந்து
சற்றே யுதரப் பசியரும்பச்
சதங்கைத் திருத்தா ளுதைந்துதைந்து
குவளைக் கருங்கண் பிசைந்தழுது
குறுவேர் துளிக்கப் பளிக்கறையிற்
குலவிச் சுலவு மிளமயிலிற்
குழைந்தங் கெழுந்த குறிப்பறிந்து
கவளக் களிற்று மலையரசன்
காதன் மனைவி வந்தெடுத்துக்
கண்ணீர் துடைத்து மடியில்வைத்துக்
காமர் முலைப்பா லூட்டவுண்ட
பவளக் கனிவாய்ப் பசுங்கிளியே
பரவைத் திரைநீ ராடுகவே
பரையே குலசைப் பதித்தாயே
பரவைத் திரைநீ ராடுகவே. எ

கிடந்து தவழுங் குடவளையாற்
கிரண மெறிக்கு நிலாக்குவளை
மடங்கு கடந்து கொடிக்காலின்
கேணிக் கேறி யூறியதேன்
றொடர்ந்து சொரிய முகைவிரியுந்
துணர்ப்பூங் கமலத் தடம்புகுந்து
துள்ளிக் கயல்கள் குதிக்குமந்தச்
சுனைச்செங் கமல மிசைவிசும்பி

ணடந்து திரியுஞ் சுடரினென்று
நாளி லிருந்து மறுகில்வந்து
நகைவெண் டாளத் திரளுமிழ்ந்து
நன்னீர்க் கயத்தின் மகிழ்ச்சியிற்போய்ப்
படர்ந்த குலசைப் பதித்தாயே
பரவைத் திரைநீ ராடுகவே
பரையே யறத்தை வளர்த்தவளே
பரவைத் திரைநீ ராடுகவே. அ

புகலுங் கருணைப் பெருங்கடலே
புகலப் படாத குணமலையே
போற்று ரகலச் சுழல்காற்றே
புகழ்வோர் தழைக்கப் பெயுமழையே
இகலும் வினைநோய்க் கொருமருந்தே
யிகழா நின்றோர்க் குறும்பிணியே
யெழுதுந் தமிழி னிசைக்கிசையே
யெழுதா மறைக்கு ளுறைபொருளே
அகலு முடம்பி னுயிர்க்குயிரே
யகலா வறிஞ ரகத்தமுதே
யறத்தை வளர்க்கு மணிவிளக்கே
யருவே யுருவே யம்மேநீ
பகலு மிரவு முழங்கியெழும்
பரவைத் திரைநீ ராடுகவே
பரையே குலசைப் பதித்தாயே
பரவைத் திரைநீ ராடுகவே. சு

வேறு

தானமுறப்பெரி யோர்பரவப்பர
வைப்புனலாடுத லாடுகவே
சங்குமுழங்கு முழங்குதிரைப்பர
வைப்புனலாடுத லாடுகவே
தேனிதழித்தொடை யார்மகிழப்பர
வைப்புனலாடுத லாடுகவே
தென்றன்மலர்த்துகள் சிந்தவலைப்பர
வைப்புனலாடுத லாடுகவே
ஆனவிசைத்தமிழ் வாழ்வுபெறப்பர
வைப்புனலாடுத லாடுகவே
யன்பர்தழைக்க நிலம்பொலியப்பர
வைப்புனலாடுத லாடுகவே
வானவர்பொற்றொடி மாதர்கையிற்பர
வைப்புனலாடுத லாடுகவே
மன்குலசைப்பதி வந்ததிருப்பர
வைப்புனலாடுத லாடுகவே. 0

நீராடற்பருவம்

முற்றிற்று

# ௰. ஊசற்பருவம்

மாமக நடக்கும்விண் மட்டுமெட் டுயரூஞ்சன்
மண்டபச் சுற்றுநாப்பண்
மன்னுமின் னெல்லாந் திரண்டிரண் டுருவாகி
வந்ததென நின்றமுந்நீர்க்
காமர்செம் பவளக் கொழுங்கா ணிறுத்திமர
கதவிட்ட மிசைகடாவிக்
கங்குலும் பகலென வெறித்திடுஞ் செம்மணிக்
கதிர்மணி வடங்கள்பூட்டித்
தாமவெண் டரளவச் சிரமழுத் திடுபசுந்
தமனியப் பலகைசேர்த்துத்
தமனியச் சுழுகிட்ட தவிசிட்டு மேல்விதா
னஞ்செய்து கலைமகளுடன்
பூமகளு மேவடந் தொட்டாட்ட நிலைபெற்ற
பொன்னூச லாடியருளே
புவனவுயி ரத்தனையு மருளறம் வளர்த்தவுமை
பொன்னூச லாடியருளே. ௧

விண்ணினயி ராணிமுதன் மங்கையர்கள் செங்கைதலை
மேற்கொண்டு தாள்வணங்கி
விரைகமழ் புதுப்பனீர் கொடுவந்து நீராட்டி
மிக்கசெம் பட்டுடுத்துக்
கண்ணின்மை யெழுதிக் கருங்குழ றிருத்திக்
கவின்பெற முடித்தெடுத்துக்

கார்மர்திரு வும்பிறையு முறையிற் றரித்துவான்
கற்பக வலங்கல் சுற்றிப்
பண்ணிசை தரும்பாத கிண்கிணி யணிந்துகைப்
பணிகுழைப் பணியணிந்து
பைம்பொற் பதக்கம்வெண் டாளவட மிட்டுப்
பசுஞ்சாந்து வேய்ந்துபரவும்
புண்யவதி பாக்யவதி யதிரூப வதியழகு
பொன்னூச லாடியருளே
புவனவுயி ரத்தனையு மருளறம் வளர்த்தவுமை
பொன்னூச லாடியருளே உ

இங்கிதச் சொற்சுவை பொருட்சுவை பதச்சுவை
யிசைச்சுவை யலங்காரமு
மெள்ளளவு மொருவாது திருவாத வூரன்முன்
னியம்பும்வா சகமுமங்நாட்
சங்கிலித் தளையிட்ட மாறனையு மெண்ணாது
தண்பரவை யிற்படிந்து
சந்தப் பொருப்பிடைகண் வளருமொரு புயல்பொழி
தமிழ்ப்பெருக் கமுமடத்திற்
கங்குலிற் றழலிட்ட சமணரைக் கழுவேற்று
காரணப் பிள்ளைகவியும்
கற்றாண் மிதக்கமிசை வந்துமக ராலயக்
கரைசேர்ந்த புலவனியலும்
பொங்கிசை மிகும்புரா ணங்களு முழங்கிடப்
பொன்னூச லாடியருளே.
புவனவுயி ரத்தனையு மருளறம் வளர்த்தவுமை.
பொன்னூச லாடியருளே ௩

பாதார விந்தச் சிலம்பொலித் தாடப்
பணைத்துப் புடைத்தகொங்கைப்
பங்கயத் துணையாட வொட்டியா ணத்திஞெடு
பட்டுத்த ரீயமாடக்
காதாரு மகரகுண் டலமாட வில்லிதழ்க்
கனியின்மணி முறுவலாடக்
கைவளை யொலித்தாட மைவளையு மிருவிழிக்
கடையின்மெய்க் கருணையாட
ஆதார மண்டலமு மெண்டிசையு மெவ்வுயிரு
மாடவே டணையளித்தோ
ராகமுந் தொலையாத மோகமுங் கூடநின்
ருடவா பரணமாடப்
போதா சனத்திலுறை மழலைக் கிளிப்பிள்ளை
பொன்னூச லாடியருளே
புவனவுயி ரத்தனையு மருளறம் வளர்த்தவுமை
பொன்னூச லாடியருளே. ௬

மின்னலம் பாயுலவு சாலிற் கிடந்துள்ளி
வெள்ளிடையி லொருபருவரால்
வெடிபோய்விண் மேகத்தி னகடுகிழி யப்பாய்ந்து
மீண்டுநீண் டோங்கிலைப்பூங்
கன்னலைக் கதலியைக் கமுகைப் பலாவைக்
கடந்துசுனை யிற்புகுந்து
காவிக் கயம்படிந் தெழுமேதி தன்குழக்
கன்றின்மடி முட்டமுட்டச்
சொன்னலந் தருசுவைப் பால்சுரந் துள்ளே
சொரிந்திட விரிந்தபாலைத்

தோலடிப் பாலன்ன முண்டுபெடை யொடுமடற்
றாய்மலர்ப் பள்ளிவளரும்
பொன்னலந் தருமான வீரைவள நாட்டரசி
பொன்னூச லாடியருளே
புவனவுயி ரத்தனையு மருளறம் வளர்த்தவுமை
பொன்னூச லாடியருளே. ௫

வேறு

கருந்தா தனைய கொடியமனக்
கரனைக் கரிய திரிசிரனைக்
கடுந்தூ டணனைத் தொலைத்திலங்கை
கலங்கக் கடலைக் கடந்துசென்றங்
கிருந்தார் தம்மில் வந்தவனை
யல்லா லிரங்கா ரரக்கரென்று
யெதிரிட் டன்றே யமர்விளைத்த
வெல்லாப் பொல்லாக் குணமுடைய
பொருந்தார் மடியப் பொருதுவென்று
புருகூ தனுக்கும் புலவருக்கும்
பொன்னா டளித்துச் சனகியொடும்
புகறம் பியினோ டயோத்தியினில்
வருந்தா சரதி சகோதரியே
மணிப்பொ னூச லாடுகவே
மயிலே யறத்தை வளர்த்தவளே
மணிப்பொன் னூச லாடுகவே.

நம்ப வளமே கொடுப்பவளே
நம்பார் தம்பா லடாதவளே
நால்வே தமுஞ்சொல் பொருளே
நாட்பூ மலரே மலர்மணமே
கும்பம் வளர்ந்த தனத்தாயே
குலசே கரப்பட் டினத்தாயே
கூற்றை யுதைத்தா ரகத்தமுதே
குறையா நிறையாப் பெருவாழ்வே
அம்பள வாய்விழி மானே
யளக்கப் படாத குணக்கடலே
யணுவாய் மலையா யகம்புறமா
யளவுக் களவா யிருந்தவளே
செம்ப வளவாய்ப் பசுங்கிளியே
திருப்பொன் னூச லாடுகவே
செகத்தி லறத்தை வளர்த்தவளே
திருப்பொன் னூச லாடுகவே. ௭

தருமந் தழைப்பச் சிவசமயந்
தழைப்பத் திருநீற் றொளிதழைப்பத்
தானந் தழைப்பப் பரிகலத்தார்
தழைப்பப் பரவு தொண்டர்செய்யுங்
கருமந் தழைப்ப விசைத்தபிள்ளைக்
கவிதை தழைப்பக் கல்விகவி
கற்றோர் தழைப்பப் புகழ்க்குலசே
கரப்பட் டினமுந் தழைப்பவிரு
பெருமண் டலங்காத் தருள்வேந்தர்
பிடித்த செங்கோ றழைப்பமுக்கட்

பொம்மான் கைமான் தரித்தவிடைப்
பெருமான் பூட்டு முன்னுடைய
திருமங் கலப்பூண் டழைப்பவம்மா
திருப்பொன் னூச லாடுகவே
செகத்தி லறத்தை வளர்த்தவளே
திருப்பொன் னூச லாடுகவே. அ

ஊசற்பருவம்
முற்றிற்று

அறம்வளர்த்தநாயகி பிள்ளைத்தமிழ்
முற்றிற்று

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY
15 MAR 1971
2272

## (மாணவர்க்குரிய) வசன நூல்கள்

| | | |
|---|---|---|
| மனுமுறைகண்ட வாசகம் | அணு | 8 |
| *சீவகாருணிய ஒழுக்கம் | அணு | 4 |
| *அறிவுரைத்திரட்டு : உ-ம் பதிப்பு | அணு | 12 |
| அறிவு விளக்க வாசகம் | அணு | 5 |
| அப்பர்சுவாமிகள் சரித்திரம் | அணு | 12 |
| வையகத்துறக்கம் (Earthly Paradise) | அணு | 8 |

## உரை நூல்கள்

| | | |
|---|---|---|
| *நாலடியார் : அரும் பொருள் விளக்கம் | அணு | 12 |
| *நளவெண்பா : அரும் பொருள் விளக்கம் | அ. | 12 |
| *நீதிநெறி விளக்கம் : ,, ,, | அணு | 4 |
| *இனியவை நாற்பது உரையுடன் | அணு | 5 |
| இன்னாநாற்பது உரையுடன் | அணு | 5 |
| *திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதியுரை | ரூ. | 1 |
| *சோமேசர் முதுமொழி வெண்பா வுரை | ரூ. | 1½ |
| *ஆத்திசூடி மூலம் பதவுரை, பொழிப்புரை | அ. | 2 |
| *கொன்றைவேந்தன் ,, ,, | அணு | 2 |
| வெற்றிவேற்கை ,, ,, | அணு | 3 |
| மூதுரை ,, ,, | அணு | 2 |
| நல்வழி ,, ,, | அணு | 2½ |
| நன்னெறி ,, ,, | அணு | 2½ |

* *துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப் பெற்றவை.*

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
306, லிங்கச் செட்டித் தெரு, சென்னை & திருநெல்வேலி

Office of the
Director of Archaeology
2272